விலை ரூபா 2-00 ★

8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 | தை 21 | ஐ-அவ் 12 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (3—2—85) | இதழ் 350

## நாளை தமிழகத்தில்— எம். ஜி. ஆர்.!

[சென்னை]

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நாளை அதிகாலை 6 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்துசேருவார். நியூயோர்க்கிலிருந்து அவர் புறப்பட்டுவிட்டார்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடையும் முதலமைச்சர், அங்கிருந்து (8-ம் பக்கம் பார்க்க)

● அமைச்சர் தொண்டமான் கட்சி அரசிடம் வற்புறுத்து

# 'தமிழர் மீதான கொடுமைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்!'

[இ. கந்தசாமி]

"வடக்கு–கிழக்கு மக்கள் தமது சொந்த மண்ணில் ஒவ்வொரு நாளும் கொலை செய்யப்படுகின்றனர். துரத்தியடிக்கப்படுகின்றனர். பலர் முகாம்களிலும், வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இதே நேரத்தில் தமிழ்ப் பகுதிகளை வேறு இனத்தவர்களுக்கு மாற்ற அரசு யோசனைசெய்கிறது. இவ்விதமாக இந்த நாட்டில் தமழ் மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்" என்று அமைச்சர்எஸ். தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திடம் அவசரக் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கொழும்பிலுள்ள அலுவலகத்தில்திரு. தொண்டமான் தலைமையில் இ தொ காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டி கூடி, இலங்கை இனப் பிரச்னை குறித்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தது

வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்துவரும் கொடுமைகளுக்குக் கூட்ட ஆரம்பத்தில் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

சர்வகட்சி மகாநாடு எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதோ, அந்த அடிப்படையில் மீண்டும் அந்த ஆலோசனைகள் ஆராயப்படவேண்டும் என்றும், இலங்கை இனப் பிரச்னையைத் தீர்க்க இந்தியாவின் உதவி மிகவும் வரவேற்கப்படவேண்டியதொன்று என்றும், இந்தியாவின் உதவியோடு உறுதியான ஒரு அரசியல் தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் அரசாங்கத்தை இ தொ. கா நேற்று வற்புறுத்தியது.

வடக்கு கிழக்கு மக்கள் தமது சொந்த மண்ணில் கொலை (8-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

## யாழ். நீதிமன்றத்துக்கு மற்றொரு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு வழக்குவிசாரணை நடத்துவது தொடர்பாக மற்றொரு எச்சரிக்கைக் கடிதம் கிடைத்துள்ளது.

இக்கடிதம் தனிஒரு இயக்கத்தினல் மட்டும் எழுதப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இக்கடிதத்தில் விசாரணை நடைபெறுவதற்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருப்தாகவும் கூறப்படுகிறது. (க)

## இளைஞர்கள் கடத்தினர்

(சுண்டுக்குளி)

மானிப்பாய் பல நோ. கூ. சங் லொறியொனறு நேற்று மாலை இளைஞர்களினல் கடத்திச் செல்லப் பட்டது.

## பெறுமதியான பொருட்களுடன் லொறி கடத்தப்பட்டது!

[யாழ்ப்பாணம்]

பவர் அன் கம்பனியின் யாழ் கிளையிலிருந்து கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்குக் கொண்டுசெல்லப்பட்ட பெறுமதியான பொருட்கள் லொறியுடன் கடத்திச் செல்லப் பட்டுள்ளது.

6 புதிய மோட்டார் சைக்கிள்கள், களைகொல்லி, கிருமிநாசினி மருந்து வகைகள், பம்புகள் கொண்ட 16 பெட்டிகளே லொறியுடன் கடத்தப் பட்டவையாகும்

கடந்த புதன்கிழமை இரவு சுமார் ஒரு லட்சம்ரூபா பெறுமதியான பொருட்கள் மேற்படி கிளையில் கொள்ளையடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிளையை மூடிவிட்டு அங்குள்ள பொருட்களை கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்குக் கொண்டுவரும்படி பணிக்கப்பட்டதால், அதன்படி லொறி ஒன்றில் சகல பொருட்களையும் ஏற்றிக்கொண்டு கல்வி [8-ம் பக்கம் 3ம்-கலம் பார்க்க]

## தமிழ் ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இடமாற்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் தமிழ் ஆசிரியர்கள் சில தீய சக்திகளிடம் சிக்காமல், மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும், தம்முடன் இதுகுறித்து நேரடியாகத் தொடர்பு கொள்ளலாமென்றும் கல்விச் சேவை ஆணைக் குழுஅங்கத்தவர்சட்டத்தரணி கணநாதன் ஜெயக்குமார் நேற்றுத் தெரிவித்தார்.

இடமாற்றம் நியமனம் சம்பந்தபடட விஷயங்களில் சில தீய சக்திகள் ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக புகார்கள் கிடைத்துள்ளன என்றும், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் எச்சரிக்கை விடுதத்துள்ளார்

## உயிரிழப்பு காயப்பட்டோர் விபரம் சேகரிப்பு

[சுண்டுக்குளி]

வட-பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுச்குழு வட பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சம்பவங்களினல் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள், காயப்பட்டோர் விபரம்முதலியவற்றை சேகரித்து மீண்டும் ஜனதிபதிக்கு ஒரு மகஜர் அனுப்ப ஏற்பாடுகள்செய்து வருகின்றது.

'அப்பாவை ஒன்றும் செய்யாதீர்' என்று குழந்தை கதறி அழுதது

## 70 பவுண் நகை கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் ஜெ. லிங்கநாதர் வீட்டில் துபபாக்கி முனையில் வீட்டில் இருந்த 70 தங்கப்பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது இனந்தெரியாத இளைஞர்கள் இதக் கொள்ளையை நடத்தியுள்ளனர்

வீட்டில் இருந்தவர்களை ஒரு அறையில் போட்டு பூட்டிவிட்டு அவர்களுக்கு ஒருவர காவல் வைத்துவிட்டு இந்தக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

ஒரு குழந்தை அப்பாவை ஒன்றும் செய்ய வேண்டாம்' என்று கூறி தனது நகைகளை கழற்றுமாறு அழுதழுது கூறியதாம்.

தாங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறி கொள்ளை அடித்ததாகவும், எந்த இயக்கம் என்று தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது முல்லைத்தீவு பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. (க)

## "தென்கிழக்காசிய நாடுகள் உதவவேண்டும்"

[நாக்பூர்]

"இலங்கைத் தமிழர்கள் மீது இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு (8-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

வடக்கு, கிழக்கில்

## குடியேறுவோருக்கு ஊக்குவிப்பு!

(பெஞ்சமின் ராஜரட்ணம்)

வடககு-கிழக்கு பகுதிகளில் குடியமர்த்தப்படவுள்ள சிங்கள மக்களுக்கு பல ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்த அரசுமுயற்சிசெய்து வருவதாக தெரியவந்துள்ளது.

குடியேற விரும்பியவர்களுக்கு முதலில் வீடு கட்டுவதற்கென 26 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது

அத்துடன் புதிதாக குடியேறுவோர் அப்பகுதிகளில் தம்மை ஸ்தரப்படுத்திக் கொள்ளும்வரை மாதந்தோறும் 500 ரூபாவும் வழங் (8-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

## வடக்கில் எரி பொருளுக்கு பெரும் தட்டுப்பாடு!

(யா ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது வட பிராந்திய போக்கு வரத்துச் சபைக்கு மட்டுமே நேற்று எரிபொருள் வழங்கப்பட்டது கடந்த இரு தினங்களாக எரிபொருள் நிலையம் எதற்கும் எரிபொருள் வழங்கப்படவில்லை.

'மாக்பெட்' எரிபொருள் நிலையத்திற்கு நேற்று முன் தினம் பௌசரில்வந்த 400 கலன்பெற்றேல் நேற்று பொதுமக்களுக்கு விநியோகிககப்பட்டது.

யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க எரிபொருள் நிலையம், அதற்கருகிலுள்ள தனியார்எரிபொருள் நிலையத்திலும்நேற்று எரிபொருள்வழங்கப்படவில்லை இதனல் மக்கள் பெற்றோல் பெறுவதற்கு வீதி வீதியாக அலைந்தர்கள்.

(8-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Broilers இறைச்சி கோழிகள் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்டர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 1653

அன்டர்வூட் [Underwood] தட்டச்சுயந்திரம் [ஆங்கில ] விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: உருத்திரா, 12/3 அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை. 1619

சங்கரத்தை பத்திரகாளி கோவிலிருந்து நூறு யார் தூரத்தில் 6 பரப்புக்காணி வீடு கட்டக்கூடியது வசதியுடன் விற்பனைக்குண்டு பாலன் மில்ஸ், மாவடி, வட்டுக்கோட்டை. 1654

கொக்குவில், பொற்பதி ரோட், உடையார் ஒழுங்கையில் 2½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி அ. செல்லையா பொற்பதிரோட், கொக்குவில் கிழக்கு, .கொக்குவில். 1637

ஏசியா சைக்கிள்,மேசைமின் விசிறி, டின்னர்செற், டீசெற், பெரிய சூற்கேஸ், பைரெக்ஸ், டிஷ்களும் வேறு பொருட்களும் நியாயமான விலையில் 155, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1649

## தேவை

14—18 வயதுக்குட்பட்ட ஆண் வேலைக்குத் தேவை. யாழ் நகருள், அல்லது அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். மோர்வின்ஸ், 91/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1636

தினமும் பாவனையிலுள்ள பொருட்கள் விற்பதற்கு ஓர் விற்பனைப் பிரதிநிதி (Van Sales Representative) தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. மாதம் Rs. 1500/- க்கு மேல் வருமானம் பெற வாய்ப்புண்டு. இரண்டு நடுவர்களின் பெயருடனும், இரண்டு சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும். C/o ஈழநாடு. 1645

யாழ் நகரில் உள்ள வியாபார ஸ்தாபன மொன்றிற்கு 40 வயதுக்குட்பட்ட விற்பனையாளர் தேவை. ஆங்கிலத்தில் எழுத வாசிக்க தெரிந்தவர் விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும், முன் வேலைசெய்த அனுபவத்துடனும் எழுத்து மூலம் 11-2-85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1604, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1604

## வகுப்பு

Berlin - பேர்லின் போக எண்ணமா? சிறிதளவு பாஷை தெரிந்திருப்பது நல்லது. German - ஜெர்மன் பாஷை சொல்லிக் கொடுக்கப்படும். S. சொர்ணலிங்கம், இல: 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [மனோகரா தியேட்டர் அருகில்] 1623

ஹோமியோபதி பேரவையினால் ஏப்ரல் 1985 ல் நடாத்தப்படவிருக்கும் வைத்தியப்பரீட்சைக்கான துரித மீட்டல் வகுப்புகள் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்ப்பாணத்தில் 07-02-85 ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். ஹோமியோபதி வைத்தியசாலை, 784/5 பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம். 1597

## விற்பனைக்கு

இராச வீதியில், தாவடியில், நிலாவரையில் மூன்று காணிகள் தொழிற்சாலை அமைக்க உகந்தது. தொடர்புகொள்க. 171A பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22562 1661

L 300 டெலிக்கா Van 82 Model Brand New ஆகஇறக்குமதி செய்யப்பட்டது. 27,000 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடியது. திரு. N. ஸ்ரீராம், அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை அல்லது திரு. S. செல்வேந்திரா, 42, K. K. S. ரோட், யாழ்ப்பாணம், 1659

1 பரப்பில் மின் இணைப்பு மின்சாரம் தண்ணீர் வசதியுடன் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் கைத்தொழில் ஸ்தாபனமாகவோ, ஸ்ரோராகவோ, வீடாகவோ பாவிப்பதற்கு ஏற்ற புதிய கட்டிடம் விற்பனைக்கு உண்டு. துர்காஸ், 185/1 கில்னர்லேன், கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 1576

நல்ல நிலையில் உள்ள ஒஸ்ரின் B M C 24 சிறி தொடரிலக்கமுள்ள லொறி உடன் விற்பனைக்குண்டு. 112, சிவராசா அவனியூ பலாலி ரோட், யாழ்ப்பாணம். 1658

சுன்னாகம் நிலாவரை வீதியில், நிலாவரைக் கிணற்றில் இருந்தும் கிணற்றிலிருந்தும் தண்ணீர்பெறும் 28 பரப்பு, 16 பரப்புக்கொண்ட இருவாழைத் தோட்டங்களும், 32 பரப்பு பண்படுத்தாத காணியும் விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்கட்கு: சி நா. தங்கராசா, மண்டான் ஈவினை, புன்னாலைக்கட்டுவன். 1666

சுன்னாகம் முத்துக்கிருஷ்ணர் வீதியிலிருந்து 150 யார் தூரத்தில் 5 பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. வீதி தாரிடப்பட்டும் மின்கம்ப இணைப்புடனும் உள்ளது விபரங்களுக்கு: எஸ். நடேசபாத விருதயர், முத்துகிருஷ்ணர் வீதி, சுன்னாகம். 1664

வீட்டுத் தளபாடங்கள், பாவனைப்பொருட்கள், மின் உபகரணங்கள், பியானோ விற்பனைக்குண்டு. திரு E S. நவரட்ணராசா (தொலைபேசி: 23013) 122 B, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1671

Fiat 1255 காரும், வீட்டுச் சாமான்களும் உடன் விற்பனைக்கு 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 1672

புதிய National NV 300 EN வீடியோ டெக் விற்பனைக்குண்டு ஒலும்பியா ஒட்டோ வேக்ஸ், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம். 1670

## சேவை

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது தயாரித்து அளிப்போர்சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா அல்லது சாவகச்சேரியில் சுல்தான் அப்துல் காதர் சகோதரர்கள் அல்லது கண்டி வீதி, கிளிநொச்சி. 1314

## SALE

Piano Chappell Under Damper highest offer 7, Somasundaram Avenue Chundikuli. 1669

## விற்பனைக்கு

அளவெட்டி தெற்கில் அடுவன்பற்றுப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; நேரில் திரு. S. பாலரட்னத்துடன் தொடர்பு கொள்ளவும். 32, சிங்கராயர் ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 1677

கச்சேரி கிழக்கு லேனில் 2 பரப்பு காணியும் ஆனந்தன் வடலி வீதியிலுள்ள 3 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:ச. பாக்கியநாதன் 4 அருளம்பலம் வீதி, அரியாலை யாழ்ப்பாணம். 1571

## தேவை

சிற்றூண்டிபலகாரம்போடக்கூடிய கோக்கி-உடன் தேவை. நேரில் வரவும் ரவர் கோப்பி அன் கூல்பார் வெலிங்டன் தியேட்டர் முன்னால். 1673

## வைத்தியர் தேவை

கிளிநொச்சியில் பிரபல வைத்தியசாலைக்கு பதிவு பெற்ற R.M.P. உடன் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் தொடர்பு முகவரி:

இயக்குனர்

குமரன் கிளினிக்

பரந்தன்.

1668

புங்குடுதீவு – நயினாதீவு பல. நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 3201 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்ய இருக்கிறது. விண்ணப்பப்பத்திரத்திற்கு ரூபா 5/-ம் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப்பெற்று 14-02-85ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், புங்குடுதீவு-நயினாதீவு பலநோ. கூ. சங்கம், புங்குடுதீவு. என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்

என்பலப்பின் இடதுபக்க மூலையில் ''கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். சாக்கு விபரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1; | 67 கிலோ அரிசி சாக்கு | 2025 |
| 2. | பிறிமா சாக்கு | 383 |
| 3. | 100 கிலோ சீனி சாக்கு | 109 |
| 4. | 50 கிலோ சீனி சாக்கு | 243 |
| 5 | நவதானியச் சாக்கு | 234 |
| 6. | கழிவு சாக்கு | 120 |
| 7. | துண்டுச் சாக்கு | 59 |
| 8. | போறை பாய்க் | 28 |
| | | 3201 |

பொதுமுகாமையாளர்
புங் நயி. ப. நோ கூ.
சங்கம், புங்குடுதீவு.
1662

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நோயின்கொடுமை தாங்காமல் 82 வயது வயோதிபப் பென்சனர் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தம்பையா என்பவரே தற்கொலை செய்தவராவர்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

# வாகனவரி வசூலிக்கும் ஊழியர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகருக்கு அனுமதிப் பத்திரமின்றி வாகனங்கள்வருவது தடைசெய்யப்பட்டுள்ளதால், வாகனம் நிறுத்துவதற்கான வரி அறவிட்டு வந்த யாழ். மாநகரசபை ஊழியர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நடைமுறையினால் யாழ். நகருக்கு மிகக்குறைவான வாகனங்களே வருகின்றன.

வாகனம் நிறுத்துவதற்கான வரி அறவிட 18 ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தினமும் அறவிடப்படும் வரியில் 50 வீதம் சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது.

தற்போது வேலையிழந்திருக்கும் இவர்களில், சிலருக்கு மட்டும், தற்காலிக காவலாளி வேலை வழங்கப்பட்டுள்ளது. (க)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்

சங்கீத பூஷணம்

திரு. கதிர்காமர் கு[illegible]மோகராம்பிள்ளை



ஆண்டவன் படைப்பு:

04–10–1922

ஆள்வோன் பறிப்பு:

04–01–1985

எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே, ஒரு கணப் பொழுதேனும் உங்களை மறக்க முடியாது கலங்கி நிற்கிறோம். சைவத்தின் பெருமைகளை கனிவோடும், பரிவோடும் எடுத்துரைத்து இன்று இறைவனிடம் வேண்டி கண்ணீரால் அஞ்சலி செலுத்தும

மனைவி, பிள்ளைகள், தம்பிமார், மைத்துனர், சகோதரி, மைத்துனிமார், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

03—02—85 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

71/9 A, அரசடி வீதி, யாழ்ப்பாணம். 1665

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் விண்ணப்பபடிவங்களை சங்க காரியாலயத்தில் ரூபா 1/- செலுத்திப் பெற்று, பூர்த்தி செய்து எதிர்வரும் 20 2-85 புதன்கிழமை பி ப. 3-00 மணிக்கு முன்னதாக தலைவர், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், அளவெட்டி என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்ப படிவங்களுடன் கல்வி, அனுபவ, பிறப்புச் சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகள் அனுப்பப் படல்வேண்டும். சான்றிதழ்களின் புகைப்படப்பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்டங்கள் நிராகரிக்கப் டும். விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**கல்வித்தகமை:**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 10-வது சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டத்திலான 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டம் அல்லது அதற்கிணையான தகமை.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க. பொ. த (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 01வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 25 — 45

சம்பள விபரம்: 400 — 720

$20 \times 10 — 30 \times 4$

தலைவர்.

1667

## எமது சிறுகதை

# அவன் ஒரு ரசிகன்



**தி.எட்வேட் லியோன்**

மைதானத்தில் ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது!

நுழைவாயிலில் 'ரிக்கற்' பெற்றுக்கொண்டவன் போல் அமர்ந்துவிளையாட்டை ரசித்த வண்ணமிருந்தான் இராஜேந்திரம்.

முதலாவது கோலைப்போட்டுக்கொண்டது அவனுடைய அபிமானத்துக்குரிய கோஷ்டியான ''சென்மைக்கல்ஸ்''.

மைதானத்தில் 'சென்மைக்கல்ஸ்' கோஷ்டியின் ஆதரவாளர்கள் மிகவும் குறைவு. ஆரவாரங்கள், எதிர்பார்த்த அளவுக்கு இராஜேந்திரத்தின் அபிமான கோஷ்டிக்குக் கிடைக்கவில்லை இதனை இராஜேந்திரத்தால் பொறுத்துக்கொண்டிருக்கமுடியவில்லை. தனது முழு பலத்தையும் உபயோகித்துச் சத்தமிட்டான் மைதானத்தையே அதிரவைப்பதுபோல கைதட்டினான்.

அவனுக்கு அருகில் அமர்ந்து விளையாட்டை ரசித்துக்கொண்டிருந்த எதிரணிக் கோஷ்டியின் ஆதரவாளர்களுக்கு இராஜேந்திரனின் செயல்கள் மிளகாய்த்தூளை விசி எறிவது போல இருந்தது.

'தம்பி! இதில் இருந்துகொண்டு கத்திக் குளறாமல் எழும்பி வேறெங்காவது போய் இருந்து குளறும். எங்கட காலுக்கும் கையுக்கும் வீணை வேலை கொடுக்காமல் இரும்'' என்று ஒரு குரல் தடிப்பாகத் தெறித்தது.

பாவம், இராஜேந்திரம்! 'ரிக்கற்' இல்லாமல் பயந்து விளையாட்டை ரசித்துக்கொண்டிருக்கிற எனக்கு இன்னொரு பயமுறுத்தலா? அவனுடைய மனதுக்குள் அச்சம் அரும்பத் தொடங்கியது.

பிரதம மத்தியஸ்தர் முருகையாவின் 'விசில்' சத்தம் அவனை மீண்டும் மைதானத்துக்குள் கொண்டுவந்தது.

இரண்டாவது கோல்!

அவனது அபிமானத்துக்குரிய விளையாட்டு வீரனான மணி, கோலைப்போட்டுக் கொண்டான். துள்ளி எழுந்து கைகளைத் தட்டவேண்டும் போல இருந்தது. ஆனால் பக்கத்தில் இருந்தவர்களின் எச்சரிக்கை அவனை மிரட்டியது.

சௌகரியமான முறையில் தனது 'ரீ அக்ஷன்'களைக்காட்டுவதற்கு வசதியாக வேறு ஓர் இடத்தில் போய் அமரவேண்டும் போல அவனுக்கு இருந்தது.

விளையாட்டு அமைப்பாளர்களில் சிலர் மிகவும் வேகமாகச் சில ரசிகர்களின் 'துள்ளல்களை' அடக்கிக்கொள்வதில் மும்மரமாயிருந்தனர்.

'ரிக்கற்' இல்லாமல் விளையாட்டு மைதானத்தில் பிரவேசித்ததற்காக இரு பொலிஸ்காரர்கள் இளைஞன் ஒருவனை கொறகொறவென்று இழுத்துக்கொண்டு போவதைக் கண்டதும் இராஜேந்திரன் நெஞ்சு படபடத்தது.

தான் இருக்கும் இடத்தை விட்டு வேறோர் இடத்துக்கு போகவேண்டுமென இப்போது தீர்மானித்துக்கொண்டான்.

பிரதம மத்தியஸ்தரின் நீண்டதொரு விசில் சத்தம் அனைவரதும் காதில்விழத்தவறவில்லை.

இடைவேளைஎன்பதை மத்தியஸ்தர் முருகையாவின் விசில் சத்தத்தில் இருந்து இராஜேந்திரம் விளங்கிக்கொண்டான்.

பந்து நிற்பாட்டப்பட்டு மைதான மத்தியில் வைக்கப் பட்டது.

●

மைதானத்தின் மூலையில் இருந்து ஐஸ்பழங்களை விற்பனை செய்வதற்காக மணியை கிலுக்கிய வண்ணமிருந்தனர் ஐஸ்பழ வியாபாரிகள்.

இரண்டு கோஷ்டிகளுக்கும் அன்றைய போட்டி அமைப்பாளர்கள் பழங்களைக்கொடுத்துதவினர்கள்.

மீண்டும் ஒரு நீண்ட விசில் சத்தம் ரசிகர்கள் அவரவர் இருப்பிடங்களை நாடினர்கள்.

இராஜேந்திரம் இப்போது ஐஸ்பழ வியாபாரிகள்இருக்கும் மூலையில் அமர்ந்து கொண்டான்.

அவனுடைய அபிமானத்துக்குரிய விளையாட்டுவீரன் மணி மிகவும் சுறுசுறுப்பாக விளையாடிக்கொண்டிருப்பதைப் பற்றி மூலையில் இருந்துகொண்டு விற்பனை செய்யும் வியாபாரிகள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டதும் இராஜேந்திரத்துக்குச் சந்தோஷம் பொங்கி வழிந்தது.

தான் அமர்ந்திருக்கும் இடம் தனக்கு மிகவும் பொருத்தமானதென்றும், தனக்கு எதுவித பிரச்னைகளையும் தராது என்றும் அவன் நம்பினான். அதனால் அவனுக்கு பெரும் நிம்மதியாக இருந்தது.

ஒலி பெருக்கி விளையாட்டு வீரர்களின் உற்சாகத்தை ஊக்குவித்துக் கொண்டிருந்தது.

இராஜேந்திரத்தின் அபிமானத்துக்குரிய கோஷ்டியுடன் எதிரணிக் கோஷ்டி ஒரு கோலைப் போட்டுக்கொண்டது தான் தாமதம், பக்கத்தில் இருந்து விற்பனை செய்யும் ஐஸ் பழ வியாபாரிகளின் மணிச் சத்தம் இராஜேந்திரத்தைத் திடுக்குற வைத்தது.

ஒரேயொரு வியாபாரி மட்டும் மிகவும் சோர்வுற்றிருந்தான்

இராஜேந்திரத்தினால் நம்பவே முடியவில்லை. அந்த வியாபாரி ஒரு வேளை தன்னுடைய அபிமானக் கோஷ்டியின் ஆதரவாளனோ ? அல்லது இன்று அவனுக்கு வியாபாரம் நடக்காததால் சோர்ந்து போய் இருக்கிறானோ...?

இப்படிப் பலவாறு யோசித்தான் இராஜேந்திரன்?

மீண்டும் ஒருகோலை ராஜேந்திரத்தின் அபிமானக் கோஷ்டியின் எதிரணி போட்டுக் கொண்டது

ஆரவாரங்கள் மைதானத்தில் முழக்கமிட்டன.


இராஜேந்திரம் கொஞ்சம் மனத்தளர்ச்சியுடன் காணப்பட்டான். இருந்தும் அவனுடைய மனதில் ஒரு தெம்பு காணப்பட்டது. தன்னுடைய அபிமானக்கோஷ்டியே வெற்றி பெறுமென்றுஅவன் நம்பினான்.

சிறிது நேரத்துக்கு முன்பு தென்பட்ட அந்த இரண்டு பொலிஸ்காரர்களும் இப்போது இராஜேந்திரத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இராஜேந்திரத்தின் முகத்தில் பயக்களை ஓடிட்டது. அவன்மீது பொலிஸ்காரர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

(6ம் பக்கம் பார்க்க)

---



## சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

**தமிழில்: 'பேனு'**

பேஜின் கையிலிருந்த காசைசட்டெனபறித்தெடுத்த சைக்ஸ், கிழவனின் முகத்தை முறைத்துப் பார்த்தபடி அதனை மடித்து கழுத்தில் கட்டியிருந்த லேஞ்சியில் முடிந்துகொண்டான்.

''இது எமது வேலைக்குகூலி, நீ வேண்டுமானால் புத்தகங்களை வைத்துக் கொண்டு படி. இல்லையென்றால் விற்றுவிடு'' என்று கூறினான் சைக்ஸ் பேஜினிடம்''அவைஅந்தமுதிய கனவானுடையவை, நான் சாகக் கிடந்தபோது என்னை எடுத்து காப்பாற்றிய அந்தப் பெரிய மனிதருடையவை. தயவு செய்து புத்தகங்களையும்காசையும் திருப்பி அனுப்பி விடுங்கள். என்னை வேண்டுமானால் வாழ்க்கை முழுவதுமே உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவைகளை மட்டும் அனுப்பிவிடுங்கள். நான் அவைகளைக் களவு எடுத்துவிட்டதாக அவரும் அந்த கருணையுள்ள முதிய அம்மையாரும் நினைப்பார்கள்'' என்று மன்றாடினான் ஒலிவர். பேஜினின் காலடியில் வீழ்ந்து கைகளை அடித்துக்கொண்டு கெஞ்சினான்.

''அவன் சொல்வது சரி'' என்றான் பேஜின் சுற்றிலும் பார்த்தபடி. ''நீ சொல்வது சரி ஒலிவர்-நீ சொல்வது சரி,- நீ திருடிவிட்டாய் என்றுதான் நினைப்பார்கள் ஹஹ்ஹா...! நாங்கள் தெரிந்தெடுத்திருக்கும்படி சரியாகவே நடந்திருக்கிறது'' என்று சிரித்தான் யூதன்.

அங்கு நடந்தவைகளும் பேசப்பட்டவைகளும் ஒலிவரை விசரனாக்கிவிட்டன, அவன் திடீரெனப் பாய்ந்து பெரும் கூச்சலிட்டு கத்தியபடி அறையைவிட்டு ஓட்டம் எடுத்தான். பையன்கள் இருவரும் பேஜினும் பின்னாலேயே அவனைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள் ... அதே சமயம் ''நாயைப் பிடித்துக்கொள் பில்'' என்றுகத்தியபடி நான்ஸி சைக்ஸின் முன்னால் பாய்ந்து கதவைச்சாத்தியபடி''நாயைப் பிடித்துக்கொள் இல்லையென்றால் அந்தப் பையனைக் குதறி விடும்'' என்றாள்.

''அவனுக்கு அப்படித்தான் வேண்டும்'' என்று கூறி நான்ஸியை அப்புறப்படுத்தியபடி ''தள்ளிநில் இல்லையானால் உன் தலையை சுவரில் மோதி நொறுக்கிவிடுவேன்'' என்று கத்தினான் பில்சைக்ஸ்

''அதைப்பற்றி நான்கவலைப் படவில்லை பில், ஆனால் அந்தச் சிறுவனை நாய் குதறவிடமாட்டேன், அதற்குமுன் என்னை நீ கொன்றுவிட்டால் அல்லாமல்...'' என்றாள்.

அதேசமயம் ஒலிவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு பையன்களும் பேஜினும் வந்து சேர்ந்தார்கள், பேஜின் என்ன நடக்கிறது இங்கே என்று கேட்டான்.

''இந்தப் பெட்டைக்கு விசர் பத்திவிட்டது'' என்றான் சைக்ஸ்.

''இல்லை அப்படி ஏதும் நினைக்காதே'' என்றாள் நான்ஸி.

''பின்னே வாயைப் பொத்திக்கொண்டு கிடவன்'' என்றான் பேஜின் கோபத்துடன்.

''இல்லை, பேசாமல் இருக்க முடியாது. என்ன செய்துவிடுவாய்'' என்று அவள் பெரிதாகக் கத்தினாள்.

இதற்கு மேலும் அவளுடன் பேசுவது நல்லதில்லையென்பது பேஜினுக்கு புரிந்துவிட்டது. கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக அவன் ஒலிவரைச் சீண்டினான்.

''சீஅப்ப. நீ ஓடிவிடப்பார்த்தாய் இல்லையா?'' என்றுகேட்டபடிகணப்புக்குஅருகேகிடந்த கரடுமுரடான ஒரு தடியை அவன் கையில் எடுத்துக் கொண்டான் ஒலிவர் பேசாமல் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உதவிக்குக் கூச்சல் போட்டாய், பொலிசைக் கூப்பிட்டாய் இல்லையா'' என்று கூறியபடி ஒலிவரின் கையைப் பிடித்துக் கொண்டான். ''உனக்கு கிகிச்சை கொடுத்தாக வேண்டும்'' என்றான். பின்னர் ஒலிவரின் தோளில் சுளீர் என்றொரு அடி கொடுத்தான். இன்னொரு அடி கொடுப்பதற்காக அவன் தடியை மீண்டும்உயர்த்தியபோதுஒலிநான்ஸி அவனுக்கு முன்னால் பாய்ந்து அத்தடியைப் பிடுங்கிஅதே வேகத்துடன் கணப்புகுள் விட்டெறிந்தாள்'' உனக்குத்தான் பையன் திரும்பிக் கிடைத்து விட்டானே பிறகு இன்னும் என்ன எதிர்பார்க்கிறாய், அவனை இருக்கவிடு பேஜின் இல்லையென்றால் இதே மாதிரி உங்களில் யாரும் அனுபவிக்க வேண்டி வரும் அதனால் நான் தூக்குமேடைக்கும் போகலாம்'' என்று கத்தினாள். இவ்வாறு பேஜின் சைக்ஸ் இருவருடனும் வெகுநேரம் வரை வாதாடிய நான்ஸி கடைசியில் மயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

அதன் பிறகு ஒலிவரை வேறு ஒரு அறையில் படுக்க விடும்படி சார்ள்ஸ்பேட்ஸிடம் பேஜின் கூறவே, இன்னொரு அறையில் ஒலிவரை அழைத்துச்சென்று படுக்கச் செய்த சார்லிபேட்ஸ் ஒலிவர் உடுத்திருந்த புதிய ஆடைகளை கழற்றி வாங்கிக் கொண்டு பேஜினிடம் கொடுத்தான்.

மீண்டும் பழைய ஆடைகளை அணிந்து கொண்ட ஒலிவர் ஒரு கட்டிலில் படுத்து நித்திரையாய்ப் போனான்.

இது இவ்வாறு இருக்க ஒலிவர் பிறந்து வளர்ந்த இடமான தொழில் கூடத்தின் பிரமுகர் திருவாளர் பம்பிள் ஒரு முக்கிய விடயமாக லண்டனுக்கு வந்திருந்தார். அச்சமயத்தில் தற்செயலாக பத்திரிகை யொன்றில் வெளியாகியிருந்த விளம்பரம் ஒன்றைப் பார்க்கநேர்ந்தது அவர்.

அந்த விளம்பரத்தை பெரியவர் பிரவுண்லோ பத்திரிகையில் போட்டிருந்தார். ஒலிவர் ருவிஸ்ற் தமது வீட்டிலிருந்து வெளியில் சென்றவன் காணாமல் போய் விட்டது பற்றியும், அவனைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தமக்கு அறிவிக்கும் படியும் மாத்திரமல்ல ஒலிவர் ருவிஸ்ற் என்ற பையனின் கடந்த கால வாழ்வு பற்றிய விபரங்கள் தெரிந்தவர்களும் தமக்கு அது பற்றி தெரிவிக்கலாம் என்றும் அதற்காக ஐந்து கினி சன்மானம் வழங்கப்படும் என்றும் திரு பிரவுண்லோ விளம்பரம் செய்திருந்தார்

இந்த விளம்பரத்தைக் கண்ட பம்பிள் பெரியவர் பிரவுண்லோவின் வீட்டுக்கே நேராகச்சென்றார்

முதியவர் பிரவுண்லோவும் அவரது நண்பர் கிறிம்விக்கும் மேல் மாடியில் அவரை வரவேற்றனர். ஒலிவர் பிறந்த வரலாறு தொழில்கூடத்தில் அவன் நடந்து கொண்டவிதம் என்பன போன்ற பலவற்றையும் அவர் எடுத்துக் கூறினர். ஒன்றும் ஒலிவரைப்பற்றிய நல்ல செய்திகளாய் இருக்கவில்லை. இதை நிரூபிக்கும் விதத்தில் தம்முடன் கொண்டுவந்திருந்த சில பத்திரங்களையும் காட்டினர் பம்பிள் பரிசுப்பணத்தை பெற்றுக் கொண்டு திரும்பிவிட்டார்.

திரு. பம்பிள் கூறியவற்றை திருமதி பெட்வின் நம்பமறுத்தார். ஆனால் முதியவர் அதனை முழுமையாக நம்பிவிட்டார். ஒலிவர் பற்றி எவருமே தம்மிடம் பேசக்கூடாது அவன் பெயரையும் உச்சரிக்கலாகாது என உத்தரவு போட்டு விட்டார். (தொடரும்)

---

### முடிவு ?

அகலமான பாதைகள்
ஆனால்
போவதற்கு வழியில்லை!
ஊரெங்கும் ஆலயங்கள்
ஆனால்
வழிபட ஆளில்லை
நீதியின் புத்தகங்கள்
திறந்தே கிடக்கின்றன
ஆனால்
நியாயங்கள் கண்களை
மூடி விட்டுஉள்ளன.

கணேஷ்.

## வளர்முக நாடுகளின் சமூகபொருளாதார அபிவிருத்தியில் எழுத்தறிவின்மையின் தாக்கம்

எஸ். அன்ரனிநோபேட்

சமூகபொருளாதாரவிருத்திக்கு வழிகாட்டும் மிக முக்கியமான நிலையமாக எழுத்தறிவு (Literacy) அமைந்துள்ளது. புதுமையான கருத்துக்களைத் தேர்ந் தெடுக்கும் சந்தர்ப்பங்களை அடைந்து கொள்வதற்கான தனித்துவமான வழியாக இது விளங்குகின்றது "எழுத்தறிவில் ஏற்படும் முன்னேற்றங்களும் பொருளாதார விருததியில் ஏற்படும் முன்னேற்றங்களும். ஒன்றுடனென்று இணைந்தவை" என "மிர்டால்" என்பவர் வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

மரபு ரீதியான அபிவிருத்திக் குறிகாட்டிகளான கைத்தொழிலாக்கம், குறைவான பிறப்புவீதம், உயர் வருமானம், அதிகரித்த உற்பத்தி, ஆகியவற்றிற்கும் எழுத்தறிவு வீத மட்டத்துக்குமிடையில் இணைவானது தெளிவாக நிலைநிறுத்தப் பட்டுள்ளது. குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் குடும்பத்திட்டமிடல் நடவடிக்கைகளில் எழுத்தறிவு முக்கிய பங்கினை ஆற்றக் கூடியதென்பதை பம்பாய் பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு சுட்டிக் காட்டியுள்ளது இவ் ஆய்வின் படி பம்பாய் நெசவுத் தொழிலாளர்களிடையே படிப்பறிவு உள்ள தொழிலாளர்களில் 31 வீதமும் டிபப்பறிவு அற்றவர்களில் 10 வீதமும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் குறிப்பிடத் தக்க அறிவு உடையவர்களாக இருந்தனர் என்பது தெளிவாகியது.

### படிப்பற்றவர் வீதம்

யுனெஸ்கோ தரவுகளின் படி உலக குடித்தொகையில் படிப்பறிவற்றவர்கள் 1950 இல் 44.3 வீதமாகவும் 1960 இல் 39 3 வீதமாகவும் 1970 இல் 34.2 வீதமாகவும் குறைவடைந்து சென்று இன்று 27.7 வீதமாகக் காணப்படுகின்றது 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் எழுத்தறிவற்றவர்களின் தொகை ஆண்டு தோறும் 5 மில்லியனல் உயர்ந்து செல்கின்றது. பொதுவாக பெண்களே ஆண்களிலும் பார்க்க அதிகமாக உள்ளனர். 19₀0 இல் பெண்களில் வயதுவந்தவர்களுக்கான எழுத்தறிவற்றவர்களின் வீதம் 58 ஆக இருந்து 1970 இல் 60 வீதமாக உயர்ந்துள்ளது.

### தற்போதைய நிலை

படிப்பறிவு அற்றவர்களின் உயர்வான வீதம் ஆபிரிக்க, அராபிய நாடுகளில் காணப்படுகின்றது. இந்நாடுகளில் வயதுவந்தவர்களில் நாலு பேருக்கு ஒருவர் என்ற முறையில் எழுதவாசிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர். ஆனல் ஆசியாவில் வயதுவந்தவர்களில் ஏறக்குறைய அரைப் பங்கினர் படிப்பறிவற்றவர்களாக உள்ளனர் பிரதேச ரீதியாக நோக்கும்போது வயதுவந்தவர்களில் படிப்பறிவு அற்றவர்கள் 1970 இல் ஆபிரிக்காவில் 73.7 வீதமாகவும் வட அமெரிக்காவில் 1.5 வீதமாகவும் லத்தின அமெரிக்காவில் 23 6 வீதமாகவும் ஆசியாவில் 46.8 வீதமாகவும் ஐரோப்பா - ருஷியாவில் 3.6 வீதமாகவும் காணப்பட்டது ஆனல் தற்போது ஆசியாவில் 35 வீதமாகவும் ஆபிரிக்காவில் 54 வீதமாகவும் லத்தீன் அமெரிக்காவில் 17 வீதமாகவும் குறைவடைந்துள்ளது.

குடித்தொகை வளர்ச்சி வீதத்துக்கும் எழுத்தறிவற்றவர்களின் வீதத்துக்கு மிடையில் தொடர்புகள் தெளிவானவை. உயர்வான எழுத்தறிவற்ற விகிதாசாரமுடைய நாடுகளே உயர்வான குடித்தொகை வளர்ச்சியைக் கொண்டுள்ளன. குடித்தொகை வளர்ச்சியைப் போன்று படிப்பறிவின்மையும் உலகளாவிய பிரச்சனையாகக் காணப்பட்டாலும், அதன் உண்மையான பரிமாணம் அறியப்படமுடியாதது. 1968 ஆம் ஆண்டு கல்விவிருத்திக்கான சர்வதேச ஆணைக்குழுவின் அறிக்கையின்படி ஆபிரிக்காவில் ஆரம்ப பாடசாலைக்

(6-ம் பக்கம் பார்க்க)

- ★ எழுத்தறிவின்மையை அகற்றுவதில் பொதுசன தொடர்பு சாதனங்களின்பங்கு அதிகரித்து வருகின்றது.
- ★ இலங்கை வளர்முக நாடுகளில் உயர்ந்த எழுத்தறிவு வீதத்தைக் கொண்டுள்ளது
- ★ குடித்தொகை வளர்ச்சிவீதம் உயர்வானநாடுகளில் படிப்பறிவற்ற பெண்கள் உயர்வான கருவளங்களைக் (Fertility) கொண்டிருக்கிறர்கள்.
- ★ 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் எழுத்தறிவு அற்றவர்களின் தொகை ஆண்டுதோறும் 5 மில்லியனல்உயர்ந்து செல்கிறது.
- ★ குறைவான வருமானம், ஊக்குவிப்பு இன்மை, கல்விபற்றிய குறைவான சிந்தனை எழுத்தறிவைத்தடைசெய்கின்றன.

---

### நினைவில் நிறைந்த அரசியலார் சிலர் 9

## பூரணகும்பம் மாலைகளுடன் வாழ்த்தும் வரவேற்பும்

எஸ். எம். ஜி.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு பொதுவாக இலங்கை வாழ் சிறுபான்மை இனத்தவர்களுக்குச் சுதந்திர இலங்கையில் சமத்துவ உரிமை பெறுவதற்கான பெரும் பொறுப்பையேற்றுக்கொண்ட திரு ஜி ஜி. பொன்னம்பலம், ஸ்தாபனம் ஒன்றை அமைத்து ஸ்தாபன ரீதியாகப் போராட வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். திரு. எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயகா தலைமையில் சிங்கள மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தி சிங்கள மக்களின் உரிமைக்காகப் போராடுவதற்குச் சிங்கள மகாஜனசபா நிறுவப்பட்டுச் செயல்ப்பட்டு வந்ததும் அதற்கு இணையாகத் தமிழ் மக்கள் மத்தியிலும் ஒற்றுமையை ஏற்படுத்தி ஒரே குரலில் தமிழர் தமது உரிமைக்காகப் போராடவேண்டிய அவசியத்தைதிருஜி ஜி. சிந்தித்தார்- இதனைத் தொடர்ந்து தமது நண்பர்கள் சிலருடன் ஆலோசனை செய்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை அவர் ஆரம்பித்தார்.

தமிழ் காங்கிரஸ் தலைவராக திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவானர். டாக்டர் இ.மு.வி:நாகநாதன் காங்கிரஸின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப் பெற்ருர்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்துக்கு 1947ம்ஆண்டில் நடந்தமுதலாவதுபொதுத்தேர்தலில்வடக்கு கிழக்கு மாகாணங்களில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் போட்டியிட்டது.

இதற்கு முன் அரசாங்க சபைத் தேர்தல் நடைபெற்ற காலத்தில் கட்சிரீதியாகத்தேர்தலில் போட்டியிடும் முறை இருந்ததில்லை. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வெவ்வேறு நிறங்கள் ஒதுக்கப்பட்டு அந்த நிறப் பெட்டிக்குள் வெள்ளைத் துண்டுக் கடதாசிகளே வாக்குச் சீட்டுக்களாகப் போடப்படும் முறை இருந்தது. அக்காலத்தில் "போடுபோடு பச்சைப் பெட்டிபோனவருடம் வென்ற பெட்டி" என்ற சுலோகம் தானிருந்தது.

முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கட்சி ரீதியில் வேட்பாளர் நிறுத்தப்பட்டதுடன் வேட்பாளர்களுக்குச் சின்னங்களும் ஒதுக்கப்பட்டன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 'சைக்கிளை' த் தனது சின்னமாகத் தெரிவு செய்தது.

திரு ஜி ஜி. பொன்னம்பலம் இப்பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் முன்னுள் உள்நாட்டமைச்சராக இருந்த அருணுசலம் மகாதேவாவைஎதிர்த்துப் போட்டியிட்டார். இப்பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பொதுச் செயலாளராக இருந்த டாக்டர் நாகநாதன் போட்டியிடவில்லை. காங்கேசன் துறையில் திரு. எஸ் ஜே.வி. செல்வநாயகம்,கோப்பாயில்குவன்னியசிங்கம், சாவகச்சேரியில் வி. குமாரசுவாமி' பருத்தித்துறையில் க. இராமலிங்கம், வட்டுக்கோட்டையில் க கனகரத்தினம், திருக்கோணமலையில் க.சிவபாலன் ஆகியோர் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டு அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இத் தேர்தலில் "சைக்கிளுக்குப் புள்ளடி, யானைக்குப் பொல்லடி" என்ற சுலோகம் எழுந்தது.

ஆனாலும் இந்தப் பொதுத் தேர்தலில் தான் திரு ஜி ஜி "தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" என்ற சுலோகத்தைத் தாரக மந்திரமாக்கினர்.

இத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது திரு.ஜி ஜியைப் பார்ப்பதற்கும் அவரது பேச்சைக் கேட்பதற்கும் மக்கள் கூட்டம் வெள்ளம் போல் திரளும். மாலை அணிவிப்பதற்காக பலர் வரிசை வரிசையாக மேடையை நோக்கி வந்து கொண்டிருப்பர். பொதுக் கூட்டம் நடைபெறும் இடங்களில் சிறிது தூரத்திலிருந்து தலைவர் ஜி ஜி யும் மற்றும் வேட்பாளர்களும் ஊர்வலமாக அழைத்து வரப் படுவார்கள். வீடுகள் தோறும் பூரண கும்பம் வைத்து ஆராத்தி எடுத்து, திலகம் இட்டு, மாலை சூட்டி போர்க்களத்திற்குப் போகும் வீரனை வழியனுப்பி வைப்பது போல் தாய்மார்கள். வழியனுப்பி வைப்பார்கள்

உருவத்தில் குள்ளம்; கரிய மேனி. தங்கநிறம் கொண்ட சில்க்ஜிப்பா, சில்க்வேட்டிசில்க் சால்வை, நெற்றியில் அழகான அளவான -சந்தனப் பொட்டு, கையில் ஒரு பிரம்பு! இத்தோற்றப் பொலிவுடன் ஊர்வலமாக வரும் ஜி. ஜி. மேடையில் ஏறியதும் மாலைகள் ஒன்றன் பின் ஒன்ருகக் கழுத்தில் வந்து நிறையும். மூச்சுவிட முடியாதபடி மாலை மூக்குவரை முட்டியதும்நான்கு புறமும் திரும்பி ஒருகம்பீரப் பார்வை பார்த்து கமராக்களின் 'கிளிக்' சத்தங்ளின் பின் மாலைகளைக் கழற்றிமேசை மீது ஒன்றன்பின் மேல் ஒன்ருக வைத்துவிட்டு மீண்டும் நிமிர்ந்து நிற்கும் ஜி. ஜி.யின் கழுத்தில் மேலும்மேலும்மாலைகள் வந்து குவியும் காட்சிகள் அன்று சாதாரணம்.

ஜி ஜி பேசத் தொடங்குகிருர். இரண்டு நிமிடம் பேசியதும் தோளில் உள்ள சால்வையை எடுத்து வரிந்து கட்டி இரண்டு உள்ளங்கைகளினுலும் இருபக்கத்தலையையும் பின்புறமாகத் தடவிவிட்டு பேச்சை தொடருவார். இடையிடையே ஆங்கிலத்திலும் வார்த்தைகள்வரும். சபையிலிருந்து கைதட்டலுக்குச் சொல்லத்தேவையில்லை.

யாழ்ப்பாணத் தொகுதியில் அமைச்சர் அருணுசலம் மகாதேவாவை 9100அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்து ஜி. ஜி. எம். பி.யானர். மற்றும் தொகுதிகளிலும் தமிழ்க்காங்கிரஸ் அமோக வெற்றியீட்டியது.

"இந்தியாவில் ஜின்ன, இலங்கையில்பொன்னு" என்று கோஷித்த அளவுக்கு திரு ஜி. ஜி, புகழின் உச்சியிலிருந்த காலம் இது.

1948ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம்தேதி இலங்கை அரசியல் சுதந்திரம்பெற்றது. இத் தினம் நாடெங்கிலும் கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. இலங்கையின் தேசியக் கொடியாகச் சிங்கக்கொடி பறக்கவிடப்பட்டது

1947 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆந் தேதி மாலை புதுடில்லியில் பிரார்த்தனைக் கூட்டத்துக்குச் சென்ற மகாத்மாகாந்தி சுட்டுக்கொல்லப் பட்டார் என்ற செய்தியினல் யாழ்ப்பாணம் சோகத்திலாழ்ந்தது. வடபகுதியில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெறவில்லை. யாழ். நகர சபை மீது இலங்கையின் சுதந்திரதினத்தையொட்டி இந்திய தேசியக்கொடியான மூவர்ணக் கொடியே பறக்கவிடப்பட்டது.

இச்சமயத்தில் சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளாத அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நந்திக்கொடிகளை அச்சிட்டு வடபகுதியில் விநியோகித்தது.

இலங்கையின்தேசியக்கொடியில் சிறுபான்மை இனத்திற்கு எதுவுமில்லை என்று ஜி.ஜி வாதாடியதைத் தொடர்ந்தே சிங்கக் கொடிக்கு முன்னல் பச்சை சிவப்புக் கோடுகள் சேர்க்கப்பட்டன.

(மிகுதி அடுத்தவாரம்)

---

## வேண்டுவது என்ன?

மாரி பொழிய வேண்டும் - நெல்
மணிகள் விளைய வேண்டும்
பாரின் மனித ருள்ளே- கொடும்
பகைமை விலக வேண்டும்!

சாதி ஒழிய வேண்டும்- யாரும்
சமனய் வாழ வேண்டும்
நீதி ஒன்றே வேண்டும்- அதன்
நிகழ்வில் உயர்வு வேண்டும்!

அன்பு வளர வேண்டும் - மீறும்
ஆசை அகல வேண்டும்
இன்பம் எவர்க்கும் வேண்டும் - பொது
இயல்பு வளர வேண்டும்!

உலகில் அமைதி வேண்டும் - தோன்றும்
உயிர்கள் வாழ வேண்டும்
கலகம் மறைய வேண்டும்- உறவு
காலந்தோறும் வேண்டும்!

ஏழ்மை செல்வம் என்னும் - பிரிவு
இன்றிச் சமானம் வேண்டும்
வாழ்வில் யாரும் ஒன்ருய- தீய
வறுமை வீழ வேண்டும்!

காலந் தந்த தாமோ?- பண்டைக்
கயமை முறைகள் யாவும்
ஞாலம் மீதில் புதுமை - நிலைகள்
நாளும் நிலவ வேண்டும்!

மா. பஞ்சலோகரஞ்சன்

# தொடர் நவீனம்

வழமைபோல் காலைச் சாப்பாடு, சோட்டைக்குரீ குடித்தல் இத்தியாதி சடங்குகள் முடிந்து காவலாளி இருக்கும் ஒதுக்குப்புறமான மூலையில் இன்குயரி மூர்த்தி, ஜீப் சாரதி துரைராசா பியோன் கோபாலு மூவரும் நின்று வம்பளக்கின்றனர்.

இது ஒரு தினசரி நிகழ்ச்சி. இன்குயரி மூர்த்தி காலையில் வரும்போது ஒரு தினசரியை வாங்கி மடித்துச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டு வந்துவிடுவார். நடப்பு அரசியல் முதல் அலுவலகத்தில் உள்ளவர்களது குடும்ப சமாச்சாரம் வரை அலசி ஆராயப்படும்! மிகப் பிரபல்யமான வம்பர் சபை இது ''திறீ இன் வண் ஒயில்' - என்று இம் மூவரையும் மற்றவர்கள் அழைப்பது வழக்கம்.

மூர்த்தி அன்றைய பத்திரிகையை சட்டைப்பையினின்றும் வெளியே எடுத்து வாசித்தார்.

முந்திக் கனக்கப் பக்கம் அடிச்சவங்கள் இப்ப நல்லாய்க் குறைச்சுப் போட்டினம்'' - துரைராசா அலுத்துக்கொண்டான்.

''அவங்களிலே பிழை இல்லைத்தம்பி! சனங்கள் முழு வெங்காயங்கள் என்று அவை வடிவாய்ப்படம் பிடிச்சு வைச்சிருக்கினம்!'' - மூர்த்தி சொல்லிக்கொண்டே சட்டைப் பையிலிருந்து சுருட்டை எடுத்துப் பற்றவைத்தார்.

''அது சரியடாப்பா கோபாலு உன்னுடைய கந்தோரிலை கனக்க விசேஷங்கள் நடந்திருக்கு நீ ஒண்டும் பேசாமல் இருக்கிறுய்...''

''விசேஷமோ... நீங்கள் எதைக் கேட்கிறீங்கள் அண்ணை?'' - கோபாலு மூர்த்தியை எதிர்நோக்கினுன்,

உங்கடை டி ஓ மிஸ் சின்னத்தம்பியின்ரை கலியாணத்தைச் சொன்னனுனடாப்பா!''

அவவுக்கு ஒரு கண்டறியாத கலியாணம்!''

''டேய்! உனக்கேனடா அந்தப் பெட்டையிலை அவ்வளவு ஆத்திரம்? அவள் கலியாணம் முடிக்கக் கூடாதே...!''- துரைராசா கேட்டான்.

''அவள் முடிச்சால் முடிக்கட்டும் எனக்கென்ன...? எண்டாலும் ஆள் சரியான கெப்பர் பிடிச்சவள்! சுந்தோரிலை ஒரு ஆம்பிளையை மதிக்கமாட்டாள்! அட என்னை விடு! அந்த எஸ் ஏ, பெரிய மனுசன் பிள்ளையார் மாதிரி நடுமேசையிலை இருக்கிறுர். இவ அதாலை இதாலை போகைக்குள்ளை பின்னலை ஒரு சிலுப்புச் சிலுப்பித் தேகத்தை ஒருக்கா குலுக்கி ! மனுசனுக்கு அவவவைக் கண்ணிலை காட்டக் கூடாது. அவ அதாலை போனுல் எஸ் ஏ பல்லை நெருமுவார் எனக்கே பார்க்கப்பயமாயிருக்கும்!

கோபாலு தன் வெற்றிலைக் காவி ஏறிய பல்லைக்காட்டிய படியே அகோரமாய்ச் சிரித்தான்.

''எடகோபாலு அந்த மனுசன் கலியாணம் முடிக்காத ஒருபிரமச்சாரி! அவைதர வளிக்கு இவளவையைக் கண்டால் பிடிக்காதுதான்!''- துரைரசா சிரித்தான்;

''நான்போன கிழமை ரவுணுக்கு ஏதோ சாமான் வேண்டப் போனனுன். இவ டிஓ வும் புருஷனும் ஏதோ சாமான்கள் வேண்டிக் கொண்டு போகக் கண்டனுன். பெட்டை முன்னுக்குநெஞ்சை நிமித்திக்கொண்டு விறுவிறெண்டு நடக்கிறுள்! இவன் பாவி பிறத்தாலே கைநிற்றயப் பார்சலோடை போறுன்! ஆள் ஒரு நோஞ்சான் மாதிரி எங்கத்தைப் பொடியனும்...?''

அணைந்த சுருட்டை மீண்டும் பற்றவைத்தார் மூர்த்தி.

எனக்குத் தெரிஞ்ச இடம் தான் அண்ணை! தகப்பன் செல்விபுரத்தில் ஒரு பழைய வீசிமெம்பர். இவன் ஒருபெடியன்தான். முள்ளியவளையிலை சரஸ்வதி வித்தியாலயத்திலே படிப்பிக்கிறுன். டிஓ வின்ரை உத்தியோகத்துக்கும் சீதனத்துக்கும் ஆசைப்பட்டுச் செய்திருக்கிறுன்! ஆள் ஒரு பயந்த

# 11

பெடியன் ஆனல் நல்லவன்'' துரைராசா கூறினுன்.

''தம்பி மாட்டுப்பட்டிருக்கிறுர்! அவள் பெடியனை சிப்பிலி ஆட்டப் போறுள்!'' —கோபாலு

''டேய் உனக்கு டிஓ விலை என்ன ஆத்திரமெண்டு எனக்குத் தெரியும்தானே! சொல்லட்டே...''

''என்ன துரைராசா, நெடுகலும் வெருட்டுறுய்... விஷயத்தைச் சொல்லன் ...'' —மூர்த்தி கேட்டார்.

''அதொண்டுமில்லை யண்ணை...! இவர் சும்மா... நான் வாறன்...''என்று சொல்லிக்கொண்டு கோபாலு அவசரமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடு தொடர்பான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அவசர வேலை என்றபடியால் அலுவலகம் முடிந்த பின்னரும் மேலதிக வேதனம் என்ற ஆசையைக் காட்டி அரச இயந்திரம் மனிதர்களை இயங்க வைத்துள்ளது.

பிரேமகாந்தன் வீட்டுக்குப் போய்விட்டான், பரமசிவம் தட்டச்சு இயந்திரத்தில் வெகு மும்மரமாக ரைப் அடித்துக் கொண்டிருந்தான் வேறு இரண்டு இலிகிதர்களும்ஏதோ பைல்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

கோபாலு மேலதிகமாக இரண்டாவது முறை தேநீர் தயாரித்துக்கொண்டு வந்து எல்லோருக்கும் வழங்கினுன்.

தேநீர் குடித்து முடிந்ததும் களைப்புத் தீர பரமசிவம் லாச்சியைத் திறந்து வெற்றிலை சீவலை வாய்க்குள் திணித்துக் கொண்டு ரசித்து மெல்லுகிருர்.

''மிஸ் சின்னத்தம்பி தன்னுடைய கலியாணத்தை மிகச் சிக்கனமாய்செய்துபோட்டா. எட இவ்வளவு காலம் இஞ்சை வேலைசெய்தும் ஒருவருக்கும் அறிவிக்காமல்...''

''அவவுக்கு ஒரு கலியாணம்...!'' —எஸ்.ஏ தனது மூக்குக் கண்ணுடியைக்கழற்றி வைத்து விட்டு பரமசிவத்தைப் பார்த்துக் கூறினுர்.

உங்களுக்கு நெடுகலும் மிஸ் சின்னததபபிலை ஒரு ஆத்திரம்!'' - பரமசிவம் சிரித்தபடியே கூறினுர்.

''ஆத்திரம் ஒண்டுமில்லை--! ஒரு மனுசரையும் மதக்கமாட்டா அவ! அதுதான் எட ஒரு மனுசன் இதிலை இருக்கிறுன எண்டு ஒரு மரியாதை--- சாய் --- ''— வெறுப்புடன் கூறினுர் எஸ்.ஏ.

''மாப்பிள்ளை எங்கத்தைப் பெடியனும்---?'' கலாவைப் பேசிய கோப உணர்ச்சி தணியவில்லை ஆயினும் அவரது வம்பு பேசும் ஆவல் குறையவில்லை

''அவவின்ரை இடத்துக்குக் கிட்டத்தானும் --- பெடியன் முள்ளியவளையில் படிப்பிக்கிறுனும்---!''-பரமசிவம் சொன்னுர்.

''அண்ணை உங்களுக்குத் தெரியுமே சங்கதி--- எங்கடை ஜீப் றைவர் துரைராஜா அண்ணையைக் கேட்கவேணும் கதையை---!''

கோபாலு வெகுசுவாரசியமாகத் தொடங்கினுன் கதையை.


''பெடியன் ஒரு சரியான வெக்கறை பிடிச்சவனும்! இவவின்ரை உத்தியோகத்திற்கும் வடிவுக்கும் ஆசைப்பட்டு முடிச்சுப் போட்டான்--- இனி இவவோடை இழுபடத்தான் இருக்கு. தம்பியின்ரை கஷ்டம்---' — தனது வெற்றிலைக்காவி ஏறிய பற்கள் தெரிய விகாரமாய் சிரித்தான் கோபாலு

''நீ அடுத்த கேஸ்---! உனக்கும் அந்தப் பெட்டையோடு நெடுகலும் ஒரு கொழுவல்--'' பரமசிவம் கூறினுர்.

''எனக்கென்ன கொழுவல் ---ஆனல் அவவின்ரை கெப்பருக்கு---''

கோபாலுவுக்கு கலா மீது மாருத ஒருவன்மம் ஏற்பட்டு விட்டது. முன்பெல்லாம் அவளைப் பார்த்து, ஒன்றுமில்லாததெற்கெல்லாம் பல்லைக் காட்டிக் கொண்டு அருகில்

# பூம்பனிமலர்கள்




போவான். அந்தப் பார்சல் சம்பவத்திற்குப் பின்பு, அவள் மீது அவனை அறியாமல் ஒரு வெறுப்பு.

தனது தராதரத்தைப் பற்றி அவன் என்றுமே நினைத்துப் பார்த்தது கிடையாது.

கலாவைப் பற்றி தப்புக் கணக்குப் போட்ட அவனின் மூளையை என்ன வென்பது?

தனது லாச்சியை இழுத்து வெற்றிலைச் சரையை எடுத்துச் சீவலையும் வெற்றிலையையும் ஒன்ருக வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

லாச்சியின் அடியில் வைத்திருந்த பார்சல் அவன்கண்களுக்குத் தெரிந்தது அது, முன்பு கலாவிடம் இவன் கொடுக்க அவளால் இவன் மீது விட்டெறியப்பட்டதுதான். அவனது மூளையில் ஒரு குறுக்கு யோசனை சட்டென்று உதயமானது.

''இவளுக்கு ஒரு வேலை காட்டத்தான் வேணும். .!''-தனக்குள் சொல்லிக்கொண்டான்.

''அண்ணை ஒரு காப்சீற் தாங்கோ'' பரமசிவத்திடம் கேட்டான்.

''உனக்கேன் இப்ப காப்சீற் இருந்தாப்போலை...''

''சும்மா ஒரு காயுதம் எழுத வேணும் ... தாங்கோ..'' -கோபாலு கெஞ்சினுன்.

பரமசிவம் வெள்ளைத்தாள் ஒன்றை எடுத்துநீட்ட, அதனை வாங்கிக்கொண்டு தனது மேசை மேல் வைத்து ஏதோ 'மடமட'வென்று எழுதினுன் கோபாலு.

தனது செயல், பெண் ஒருத்தியின் வாழ்வில் மகாபயங்கரமாக உருவெடுக்கப்போவதை அவன் அறியாமல் எழுதிக் கொண்டிருந்தான்.

''எனக்கு வேலை காட்டினியோ...இரு... உனக்குச்செய்யுறன் வேலை...'' - கோபாலுவின் வஞ்சக நெஞ்சு ஓலமிட்டது.

கலா தான் நினைத்ததைச் சாதிக்கும் தனது தனித்துவமான கொள்கையை எப்பொழுதும் நிறைவேற்றிக் கொள்வதில் துடியாய் நிற்பாள்.

தாய் எத்தனையோ எடுத்துச் சொல்லியும், எவ்வளவோ வாதாடியும், திருமணத்தை மிகமிக எளிமையாகக் குடியிருப்பு பிள்ளையார் கோயிலில் நடாத்த எண்ணி அதைச்செயலிலும் காட்டிவிட்டாள்.

''நீ ஒருத்திதானே எனக்குப் பிள்ளை! உன்னுடைய கலியாணத்தை மேளம் பிடிச்சு, பந்தல் போட்டு வடிவாகச்செய்ய எனக்கு ஆசையில்லையா நீ ஏன் இப்படிப் பிடிவாதம்பிடிக்கிறுய் கலா ... மாப்பிள்ளை வீட்டுக்காரரர் என்ன நினைப்பினம்...!-தாய் உண்மையான கவலையோடு வாதாடினுள்.

''அம்மா, மற்றவை என்ன நினைக்கப்போகினம் என்பதை பற்றி நான் கவலைப்படவில்லை! மேளமும் வேண்டாம், பந்தலும் வேண்டாம்...! பிள்ளையார் கோயிலில் சுருக்கமான முறையில் தான் எல்லாம்நடக்கும்! இதை நீங்கள் அவைக்கு அறிவியுங்கோ...!''

—கலா தீர்க்கமாய்க் கூறி விட்டாள்.

தனக்குக் கணவனுகப் போகும் சிவராசாவின் மனப்போக்கு என்ன, திருமணம் எப்படி நடாதத வேண்டும் என்று அவர்கள் ஏதாவது தீர்மானித்துள்ளார்களா என்பதைப் பற்றி அவள் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

கலியாண எழுத்து நடந்த பின்பு, சிவராசா இரண்டு முறை வந்து போய்விட்டான் வந்த போதெல்லாம் அவன் கதைத்தது குறைவு கலா கதைத்ததுதான் அதிகம்.

''கலியாணத்தை நல்ல முறையில் செய்யவேணும்! என்னோடு கூடப்படிப்பிக்கிற ஆசிரியர்கள் எல்லோரும் வருவார்கள் நீர் என்ன நினைக்கிறீர்...'' -ஒருநாள் கலாவிடம் கேட்டான் சிவராசா.

''நான் இதைப்பற்றிமுன்பே தீர்மானித்து வைத்துவிட்டேன் ..! எனக்கு இந்தமாதிரி ஆடம்பரங்களில் செலவு செய்யப் பிடிக்காது? எங்கடை ஊர்ப்பிள்ளையார் கோயிலில் மிகச்சுருக்கமாய் எல்லாவற்றையும் செய்யலாம்...''

''அப்ப நோட்டீஸ் அடிப்பீங்கள் தானே...''

''அதுவும் வேண்டாம்! ஒரு ஆளுக்குக்கொடுத்துஇன்னெரு ஆளுக்குக் கொடுக்காவிடில் வீண்குறை! பத்திரிகையில் ஒரு விளம்பர அறிவிப்புக் கொடுப்பம்...!''

கலாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சிவராசா.

''அப்ப, நீர் சொல்லுற மாதிரியே முடிச்சுவிடலாம்! அதுவும் சரிதான்... வீண் செலவு எதற்கு !'' உம்முடைய விருப்பம்தான் எனது விருப்பமும்! உம்முடைய போட்டோவைப் பார்த்து விட்டு எல்லோரும் ஆச்சரியப் பட்டுப்போனுர்கள் !'' சிவராசா சிரித்தபடியே கூறினுன்.

''ஏன்...!''-கலா வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

''இவ்வளவு வடிவான பெட்டை உனக்குக் கிடைச்சிருக்கிறுள்! நீ கொடுத்து வைச்சவன் என்று பகிடி விட்டினம்...''

ஒரு மெல்லிய புன்னகையைத் தவழவிட்டாள் கலா.

தன்னுடைய அழகை மற்றவர்கள் போற்றுகிருர்கள் என்று கேள்விப்பட்டதுமே அவள் மனம் குதூகலமடைந்தது.

சிவராசா தன் அழகில் மயங்கி நிற்கின்றுன் என்ற உணர்வு அவளை மேலும்மேலும் அகங்காரம் கொள்ள வைத்தது.

அவள் நினைத்ததும் சரிதான். சிவராசாவுக்கு எத்தனையோ இடங்களில் திருமணம் பேசிவந்தார்கள். ஏதோ ஒரு சாட்டுவைத்து எல்லாமே தள்ளிப்போய்விட்டன. ஆனல் கலாவின் சாதகமும்பொருந்தி அவளது போட்டோவும் கைக்குக் கிடைத்தவுடன் அவன் அந்த அழகில் தன்னை மறந்தான்.

தன்னேடு கூடப்படிப்பிக்கும சகாவான துரைசிங்கத்திடம் கலாவின் போட்டோவைக் காண்பித்தான்.

''மச்சான் பார்த்தியே இது தான் எனக்குப் பேசியிருக்கிற பெட்டை ...! எப்பிடி இருக்கு..?''-ஆவல் கொப்பளிக்கக் கேட்டான்.

''எட, நீ கொடுத்து வைச்சவன்...நல்லவடிவு ! இனிஉத்தியோககாரப் பெட்டை... உனக்கு இது ஒருசுவீப் விழுந்த மாதிரித்தான்...''

கலாவின் அழகிலும் அவளது உத்தியோகத்திலும்மயங்கித்தான் சிவராசா இத்திருமணத்துக்குத் தனது பூரண சம்மதத்தைத் தெரிவித்தான்.

அவளது பேச்சு, செய்கை எல்லாமே அவனுக்கு வெகு ஆனந்தத்தைக் கொடுத்தன. அவள் மனம் நோகக்கூடாது என்று சதா சஞ்சலப்படத் தொடங்கினுன். கலா சொல்வதை எல்லாமே ஆமோதிக்க வேண்டும்போல் அவனுக்குத் தோன்றியது அப்படியே நடக்கவும செய்தான்.

அவனது ஒவ்வொரு செய்கையும் கலாவைச்சந்தோஷமாக்க வேண்டும். அந்தச் சந்தோஷத்தில் தான் மகிழவேண்டும என்ற இயற்கையான ஆசை தலைதூக்கும்.

இரவில் நெடுநேரம் புத்தகங்கள் வாசிப்பான். தனது அலுவல்களையெல்லாம் முடித்து விட்டு குளியலறைக்குப்போய் மணக்க மணக்க சந்தன சோப் தேய்த்து மேனி எல்லாம் கழுவி நைற் கவுண் அணிந்து மெல்லிய ஓடிக்கொலோன் வாசனை கட்டியம் கூற,படுக்கையறைக்குள் நுழைவாள் கலா, சௌந்தர்யதேவதையாக! படிக்கும் புத்தகத்தை வைத்துவிட்டுக் கலாவையே நோக்குவான் சிவராசா.

''உண்மையிலேயே நீர் ஒரு அழகுத் தேவதை தான்...

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்து 'முடிசூடா மன்னன்'

# அப்புக்காத்து நாகலிங்கம்

யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் அப்புக்காத்து நாகலிங்கம் மூன்னின்று நடத்தாத அல்லது சம்பந்தப்படாத ஒரு நிகழ்ச்சி இல்லை என்றே கூறலாம். அவர் பாராளுமன்றத்துக்குப் போகாத படியாலோ அல்லது வேறு எக்காரணத்தாலோ அவருடைய புகழ் இலங்கையில் பரவவில்லை. ஆனால் அவர்மறைந்தபொழுது ஆங்கில இந்து சாதனத்தில் எழுதப்பட்ட இரங்கல் உரையில் அவர் ஆற்றிய சேவைகள் பூரணமாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றின் மொழி பெயர்ப்பை கீழே காண்க.

''யாழ்ப்பாணம் பொது நலங்கருதிய ஒரு முக்கிய புருஷனை இழந்து விட்டது. இவரில்லாமல் யாழ்ப்பாணம் என்ன செய்யப்போகிறது இவர்போன்ற இன்னொருவரை எப்பொழுது காண்போம். இவர் இறந்தபொழுது யாழ்ப்பாணத்திற் பல பகுதிகளில் கூறப்பட்ட துக்கக்கூற்றுக்களிற் சிலவாம்: இவர் 1897ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ந் திகதி சிவபதம் அடைந்தார். இது போன்ற ஒரு துக்கச் செய்தியை யாழ்ப்பாண மக்கள் முன்னர் கேள்விப்பட்டதில்லை. யாழ்ப்பாணம் இதற்கு முன்னர் பல துறைகளிலும் சிறந்து விளங்கிய மேதாவிகளையும் பரோபகாரிகளையும் படைத்துள்ளது. ஆனால் நாகலிங்கம் அவர்களைப் போலத் தன்னலங்கருதாது வெற்றிகரமாக பொதுநலங்கருதிச்செயலாற்றிய ஒருவரைக்காணவில்லை. சென்ற பதினைந்து வருடங்களில் இவரைப்போல மக்கள் மத்தியில் செல்வாக்கும் ஆதிக்கமும் வேறு ஒருவருக்கும் இருந்திருக்கவில்லை. ஆகவே சகலர் மத்தியிலும் அவருடைய மரணம் பெருஞ் சோகத்தை உண்டாக்கியுள்ளது. அவர்மரணம் இந்துக்கள் தமிழர் மத்தியில்மாத்திரம்துயரத்தை உண்டுபண்ணவில்லை. இவர் சாதி, மத பேதமின்றி சேவை செய்துள்ளார். இதனை அவர் இறந்ததைக் குறித்து இலங்கையின் பல பாகங்களில் இருந்து வந்த இரங்கல் செய்திகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் இவருடைய இழப்பை தமது சொந்த இழப்பாகக்கருதாவர் ஒருவரும் இருக்கமாட்டார். தனது நன்கொடைகள் மூலமும் தனிப்பட்டவர்களுக்குச் செய்த உதவிகள் மூலமும் பலருக்குச் சட்ட ஆலோசனைகள் இலவசமாகக் கூறியதன் மூலமும் அவர்களைத் தமக்குக் கடமைப்படுத்தி உள்ளார்.

உதவியவர்:

**ச. அம்பிகைபாகன்**

திரு. நாகலிங்கம் அவர்கள் உண்மையான தேசபக்தன் அவரது ஒரே ஒரு நோக்கம் நாட்டை மேன்மைப்படுத்துவதாகும். இதனைச்செய்யும் பொழுது அதிகாரிகளின் கோபத்தையோ சந்தோஷத்தையோ கவனிக்கமாட்டார். அவர் பொதுச்சேவையில் ஈடுபட்டதுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு புதுச் சகாப்தம் ஏற்பட்டது. யாழ்ப்பாணம். கொழும்பு கல்கத்தா முதலிய இடங்களில் சிறந்த கல்வியைப்பெற்று 1880ம் ஆண்டு சுப்பிறீம் கோட்டு அப்புக்காத்தாக யாழ்ப்பாணம் வந்தார். அக்காலத்தில் இவரது குடும்பம் பணத்தாலும் அதிகாரத்தாலும் உச்சநிலையில் இருந்தது. இவரது தகப்பன் திரு- ஏ. சின்னத்தம்பி அவர்கள் யாழ்ப்பாணத்து முடிக்குரிய பிரக்கிராசியாக இருந்ததோடு மிகவும் செல்வாக்குள்ளவராகவும் இருந்தார் யாழ்ப்பாணத்துக்கு வந்த உயர்கோட்டு நீதிபதிகள் எல்லோரும் அவரை மிகுந்த கண்ணியத்தோடு நடத்தினர். அப்பொழுது ''வடதேசத்து இராஜா'' என்று அழைக்கப்பட்ட அரசாங்க அதிபரான சேர். உவில்லியம் ருவைனம் இவரை வட மாகாண வீதி. பரிபாலன சபைக்கும் தான் தலைவராக இருந்த வைத்திய சாலை நிர்வாக சபைக்கும் அங்கத்தவராக்கினர். அவருடைய இனத்தவர்களும் உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்திருந்தனர். இவருடைய தமையனார் இளைய தம்பியாழ்ப்பாணக்கச்சேரியிற் பிரதம லிகிதராக இருந்தார். இவருடைய தமயனார் இராமலிங்கம் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்தி எய்யாதபொழுதிலும் அரசாங்க அதிபர் அவரை ரேகுப்பகுதியில் ஓர் உயர் உத்தியோகத்தில் அமர்த்தினார். இன்னும்பலர் இப்படிப் பெரும் உத்தியோகங்களில் இருந்தனர். இவற்றுக்கெல்

(7-ம் பக்கம் பார்க்க)

## வளர்முக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குச் செல்லக் கூடிய வயதினையுடைய குழந்தைகளில் பத்துப் பேருக்கு நாலுபேர் என்ற வீதத்திலேயே வகுப்புக்களிற் காணப்பட்டனர். நகரப் பகுதிகளிலும் பார்க்கக் கிராமப் பகுதிகளில் எழுத்தறிவற்றவர்கள் இருமடங்காக உள்ளனர். குறைவான வருமானம் குறைந்த வாசிப்பு நூலகங்கள், ஊக்குவிப்பு இன்மை, கல்விபற்றிய குறைவான சிந்தனை போன்ற பல காரணங்கள் இதற்குக் காரணமாக இருந்து வருகின்றன.

### பெண்கள் அந்தஸ்து

சமூக பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் அந்தஸ்தையும், அவர்களின் பங்களிப்பையும் தீர்மானிப்பதற்கு எழுத்தறிவு வெளிப்படையான அளவு கோலாக விளங்குகின்றது. 1970 இல் 3.5 மில்லியன் ஆண்களும், 468 மில்லியன் பெண்களும் எழுத்தறிவு அற்றவர்களாகக் காணப்பட்டனர். 1960-1970ல் எழுத்தறிவற்ற ஆண்கள் 8மில்லியனாகஅதிகரிக்க பெண்கள்40 மில்லியனாகஅதிகரித்தனர். சில தனிப்படுத்தப்பட்ட கிராமிய சமூக சூழலில் எல்லாப் பெண்களுமே எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் காணப்படுகின்றனர். மொரேக்கோவில் மொத்த கிராமக்குடித்தொகையில் 89 வீதமானவர்கள் எழுத்தறிவற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது வளர்முக நாடுகளில்கீழுழைப்பு நிலையில் காணப்படும் சனத்தொகையின் உயர்வான வளர்ச்சி வீதமானது பெண்களின் கல்விக்கான சந்தர்ப்பங்களைக் குறைக்கின்றது. மொத்த தேசிய உற்பத்தி குறைவாகவும் குடித்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாகவும் இருக்கும் நாடுகளில் பெண்கள் ''கீழ் கல்வி நிலையில் காணப் படுவதுடன் உயர்வான கருவள வீதத்தையும் கொண்டிருக் கிறார்கள். படிப்பறிவுள்ளவர்கள் புதுமையான எண்ணங்களை உடையவர்களாகவும், நவீனமயமான விருத்திகளில் சாதகமானமனப் பாங்குகளைக் கொண்டுள்ள வர்களாகவும் விளங்குகின்றனர். இதனால் குடும்பத்திட்டமிடல் கருத்துக்கள் இவர்களினால் இலகுவாக கிரகிக்கப் படுகிறது அத்துடன் புதுமையான நவீன நடைமுறைகளைக் கடினமின்றி ஏற்றுக் கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

### இலங்கையில்

வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் எழுத்தறிவற்றவர்களின் விகிதாசாரம் மிகக்குறைவாக இருக்கின்றது. 1971ல் எழுத்தறிவற்றவர்கள் 21.5 வீதமாக இருந்து 1981 இல் 13.5 வீதமாகக் குறைந்துள்ளது. நகரப்பகுதிகளில் கல்வி வசதிகள் விருத்தியடைந்துள்ளமையால் எழுத்தறிவு வீதம் அதிகம். மொனராகலை, அம்பாறை. நுவரெலியா, கண்டி, பதுளை போன்றன எழுத்தறிவு வீதம் குறைந்தமாவட்டங்களாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் கூடிய மாவட்டங்களாவும் உள்ளன.

வளர்முக நாடுகளில் குடித்தொகை அதிகரிப்பு, வறுமை எழுத்தறிவற்ற நிலைமை ஆகியவற்றிற்குத் தீர்வுகாணும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எழுத்தறிவு அற்ற நிலையில் இருந்த ஒருவனை செயல் புரியக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு ஏற்ற கல்வி அறிவை அளிப்பதற்கு பலவேலைத் திட்டங்கள் யுனெஸ்கோவினால் அல்ஜீரியா, ஈட்குவடோர், எதியோப்பியா, இந்தியா, ஈரான் மாலி, நைஜிரியா, சூடான், சிரியா, தன்சானியா, வெனிசுலா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய முயற்சிகளுக்கு பொதுசன தொடர்பு சாதனங்கள் பெருமுதவி புரிகின்றன. கானா, நைஜீரியா, செனகல், கொங்கொங் ஆகிய நாடுகளில் எழுத்தறிவின்மையை அகற்றுவதில்வானொலி மன்றங்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன.

### குடித்தொகையும் கல்வியும்

குடித்தொகை வளர்ச்சிக்கேற்ப கல்வியறிவின்மையும் வளர்ந்து செல்லும் இயல்பு வளர்முகநாடுகளில் காணப்படுகின்றது. குடித்தொகைப் பிரச்சனையைக்குறைப்பதற்குப் பிறப்புக் கட்டுப்பாட்டில் கவனம் செலுத்திவரும் நாடுகள் எழுத்தறிவு வீதத்தை அதிகரித்தல் மூலம் குடித்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம் என்பதை உணர்ந்துள்ளன. பல நாடுகள் பொதுசனக் கல்வித் திட்டங்கள் மூலம் இதனைச் சாதித்துவருகின்றன. ஆனால் நிதிப்பிரச்சனை பாரிய தடைக்கல்லாக அமைந்துள்ளது. கடன் பழுவினால் வளர்முக நாடுகள் சிக்கலுக்குள்ளாகி நிற்கும் இன்றைய நிலையில் கல்விக்குத் தேவையான நிதி மூலாதாரம் கேள்விக்குரியதே. மேற்கு நாடுகள் போட்டி போட்டு ஆயுதங்களுக்காகச் செலவழிக்கும் பணத்தில் மிகக் குறைந்த பகுதியே வறியநாடுகளுக்கு வழங்குமாக இருந்தால் அந்நாடுகளின் முக்கிய பிரச்சனைகளான குடித்தொகை அதிகரிப்பு, வறுமை, எழுத்தறிவின்மை ஆகியவற்றிற்குத் தீர்வு கண்டுவிடலாம்.

## பூம்பனிமலர்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு நீர் இப்படி இருப்பது தான் பிடிக்கும்!'' மெதுவாக எழுந்து கலாவின் அருகில் வந்து கலாவின் பட்டுக் கன்னத்தைத் தன் கைகளால் ஒன்று சேரப்பிடித்தான். அவனின் ஆவல் பொங்கிய செய்கையை கலா ஏனோ ரசிக்கவில்லை.

''உங்களுக்கு இதுதான் எப்பவும்...! விடுங்கோ...''

நிஷ்டூரமாய்ப் பதில்வந்தது. பதிலோடு நிற்கவில்லை. தன் கைகளால் சிவராசாவின் கைகளை வெடுக்கென்றுவிலத்தி விட்டாள்.

''என்ரை குஞ்சுக்குக்கோபம் வந்துவிட்டது...! நான் ஒண்டும் செய்யவில்லையப்பா.. நீர் பயப்படாதையும்...!''

— சிரித்தபடியே சிவராசா கூறினான்.

ஆனால் கலாவோ அவன் சிரிப்பையோ குதூகலத்தையோ லட்சியம் செய்யாமல் ஒயிலாகப் படுக்கையில் சாய்ந்தாள்.

சிவராசா மீண்டும் மூடிய புத்தகத்தைத் திறந்து படிக்க முற்பட்டான்.

''லைற்றை அணையுங்கோ... எனக்கு ஒரே தலையிடியாய் இருக்கு...''

—கலா சலித்தபடி கூறினாள்.

''தலையிடிக்குதோ... நீர் படும்... நான் லைற்றை அணைத்து விடுகிறன்! நாளைக்குப் படிச்சால் போச்சு...''

அன்றுதான் அந்தப் புத்தகத்தைப் புதிதாக வாங்கிக் கொண்டு வந்தான். அதை அன்றிரவே படித்து முடித்து விடவேண்டும் என்று அவன் நினைத்திருந்தான்.

ஆனல்... புதுப் புத்தகம் படிக்கப்படாமலேயே மூடி வைக்கப்பட்டது! இப்படி எத்தனையோ இரவுகளில் புத்தகங்கள் முற்றாக வாசிக்கப்படாமலே அரைகுறையாய் மூடி வைக்கப்பட்டன!

''கலாவின் தூக்கம் கலைந்து விடும்... பாவம் அவள் கந்தோரில் பகல் முழுவதும் வேலை செய்துவிட்டு வருகிறாள்... நிம்மதியாய்த் தூங்கவேணும்... —இப்படி சிவராசா தனக்குள் சொல்லிக் கொள்ளுவான்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை முள்ளியவளையிலிருந்து வந்து விடுவான் சிவராசா. சனி, ஞாயிறு இரு நாட்களும் நின்றுவிட்டு, திங்கட்கிழமை காலை புறப்பட்டு விடுவான். சில சமயங்களில் திங்கட்கிழமையும் லீவு எடுத்து, செவ்வாய் புறப்படுவான்.

ஒவ்வொரு கிழமையும் வரும் போது, கலாவுக்கு அது பிடிக்கும் இது பிடிக்கும் என்று ஏதாவது வாங்காமல் வரமாட்டான். ஆனல் அவனுக்கு இருக்கும் ஆசையும் ஆவலும் கலாவிடம் இருக்க வில்லையே---! ஒருநாள் முள்ளியவளை பஸ் நிலையத்தில் கண்ணைப் பறிக்கும் பச்சை நிறத்தில் கொய்யாப் பழங்கள் விற்பனையாகிக் கொண்டிருந்தன.

கலாவுக்குக் கொய்யாப்பழம் பிடிக்கும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டே, சில பழங்களைத் தெரிந்து எடுத்தான்.

''நல்ல கொய்யாப் பழம்! சாப்பிட்டுப் பாரும்-- '' கலாவிடம் பழப் பார்சலை நீட்டினன். அவன் பார்சலை வாங்கிய கலா பிரித்துப் பார்த்தாள் ''வேலை மினக்கெட்டு இதையே போய் வேண்டிக்கொண்டு வந்தனீங்கள்---! இதை வேண்டின காசுக்கு நல்ல கப்பல் வாழைப் பழம் வேண்டியிருக்கலாம்---!''

'உமக்கு இது பிடிக்கும் எண்டு தானே வேண்டிக் கொண்டு வந்தன்--- அப்ப நான் கப்பல் வாழைப்பழம் வேண்டிக் கொண்டு வாறன்---''

உடனேயே வெளியே போய் நல்ல திரண்ட கப்பல் வாழைப் பழம் இரண்டு சீப்பு வாங்கி வந்தான்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்றாள் கலாவின் தாய் அவளுக்குச் சிவராசாவைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது.

''ஏன் கலா உனக்கு மூளை இருக்கே--- அந்த மனுசன் உனக்கெண்டு தானே அந்தக் கொய்யாப் பழத்தை அங்கையிருந்து வேண்டிக் கொண்டு வந்தவர் இப்படி மூகத்திலை அடிக்கிற மாதிரித் தூக்கி எறிஞ்சு போட்டியே--- அவர் என்ன நினைப்பார்---''

''அம்மா அவர் என்னநினைப்பார் எண்டு நீங்கள் கவலைப் படாதேயுங்கோ---! என்னுடைய அலுவல் எனக்குத் தெரியும்--- நீங்கள் பேசாமல் இருங்கோ---!''

அலட்சியப் பதிலால் தாய் சற்று அதிர்ந்து போனாள். என்னண்டாலும் செய்---' அந்த நல்லபெடியன்ரை மனத்தைப் புண்ணாக்கி, உன்னுடைய தலையில் மண்ணை அள்ளிப்போடாதை---! அதுதான் இப்ப எனக்கு யோசனை---!—' கலாவின் தாயின் குரல் தளதளத்தது.

''என்ன விசர்க்கதை கதைக்கிறியள்--- பேசாமல் போங்கோ அங்காலை---!''— கலாவின் குரல் ஓங்கியது!

''என்ன கலாக் குஞ்சுக்கு கோபம் வந்திட்டுது',- கேட்டுக் கொண்டே சிவராசா அங்கு வந்தான். கலாவின் தாய் குசினிக்குள் நுழைந்து கொண்டாள். (வளரும்)

## சிறுகதை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''நீர் ரிக்கற் எடுத்து உள்ளே வந்தனீரா?'' என்று அவர்கள் அவனைப் பார்த்துக் கேட்டார்கள்.

இராஜேந்திரம் இல்லையென்றே பதில் கொடுத்தான்'

அவ்வளவுதான் 'கொற கொற' வென்று மைதானத்தில இருந்து அவன் வெளியேற்றப்பட்டான்.

சோர்வுடனும் வெட்கத்துடனும் வீதியை வெறித்துப் பார்த்த அவன் தனது அபிமானக் கோஷ்டியான 'சென் மைக்கல்ஸின் விளையாட்டைக் கண் குளிரக் காணமுடியவில்லையே என்ற கவலையோடு வீதியைக் கடக்க முயன்றான். அவ்வளவுதான் மோட்டார் சைக்கிள் ஒன்று அவனைத் தூக்கி அலக்காக வீதியில் எறிந்தது அவ்வளவுதான் மயங்கிவிட்டான்.

ஆஸ்பத்திரி கட்டிலில் அவனைச் சுற்றிப் பலர் நின்று கொண்டிருந்தனர். தாயின் கண்களிலிருந்து தாரைதாரையாக நீர் வடிந்து கொண்டிருந்தது

''டாக்டர்! ஆளுக்கு எப்ப நினைவு வரும்?'' என்று பல தடவைகள் கேட்டுப்பார்த்து விட்டாள் தாய்.

''வெகு கெதியிலை நினைவு வந்திடும், நீங்கள் கவலைப்படாதேங்கோ'' என்று டாக்டர் அவளைத் தேற்றினர்;

அவனது உடல் மெல்ல அசைந்தது. தாயின் கண்களிலிருந்து மகிழ்ச்சியினால் நீர் பெருக்கெடுத்தது. இப்போது அவன் கண்ணைத் திறந்தான்.

ஏதோ சொல்வதற்கு அவனது உதடுகள் துடித்தன. கண்களை அங்குமிங்கும் திருப்பினான். அவைதிடீரென்று பக்கத்துக் கட்டிலில் நிலைகொண்டன

''தம்பி இப்ப எப்படியிருக்கு''— தாய் கேட்டாள். ஆனல் அவனோ, அது...அது... என்று தனக்குப் பக்கத்துக் கட்டிலில் இருந்த நோயாளியைச் சுட்டிக் காட்டினான். அந்த நோயாளி எழுந்து அருகில் வந்தான். ஆனல் அவனோ மீண்டும் அந்தக் கட்டிலையே சுட்டிக் காட்டினான்.

''பேப்பர்'' உதடுகள் முணுமுணுத்தன.

இப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது. அவன் பேப்பரைத்தான் கேட்கின்றான் என்பது கூட நின்ற ஒருவர் பேப்பரை எடுத்து வந்தார்.

''முன்பக்கத்தைக் காட்டுவியோ?''

''காட்டப்பட்டது. அவ்வளவுதான், அவன் போட்ட சத்தம் ஆஸ்பத்திரியையேகிடுகிடுக்க வைத்தது. ஆம்! அவனது அபிமானக்கோஷ்டியான சென் மைக்கல்ஸ் வென்று விட்டது. (யாவும் கற்பனை)

# யாழ்ப்பாணத்து 'முடிசூடா மன்னன்'

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ராம் மேலாக இவருடைய சோதரியை திருவாங்கூர் உயர்தர நீதியரசர் T. செல்லப்பாபிள்ளை B. A., B. L. விவாகஞ்செய்தார். நாம் மேலே கூறியவற்றிலிருந்து நாகலிங்கம் அவர்கள் இயற்கையாக அரசாங்கத்துக்குச் சார்புடையோராய் இருக்கவேண்டுமே யொழிய அரசாங்கத்திற்கு எதிராக இருக்கவேண்டிய சூழலில் வழவில்லை.

அக்காலத்தில் துவைனம், வட மாகாண அரசாங்க உத்தியோகத்தில் உச்ச நிலையில் இருந்தார். மக்கள் இவருக்கு எதிராகச் செய்த முறைப்பாடுகள் ஒன்றிற்கும் அரசாங்கம் செவி கொடுக்கவில்லை. சேர் முத்துக்குமாரசுவாமி அரசாங்க அதிபரின் முறைக்கு மாறான செயல்களைப்பற்றி சட்ட நிருபண சபையில் கர்ச்சனைசெய்தார். தேசாதிபதி சேர் யேம்ஸ் லாங்டன் (Sir James Longden) யாழ்ப்பாணத்துக்கு 878ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் விஜயஞ்செய்தபொழுது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தலைமையில் ஒரு தூது கோஷ்டி கவர்ணரைச்சந்தித்து அரசாங்க அதிபரின் அநீதியான செயல்களை எடுத்துக்கூறும் ஒரு வரவேற்புப் பத்திரத்தையும் வழங்கியது. எக்ஸ்சாமினர் (Examiner) என்னும் பத்திரிகையின் ஆசிரியர் லுடோவிசி தனது பலம் முழுவதையும் சனங்களுக்காக உபயோகித்தார். ஆனல் இவை ஒன்றும் பயன்படவில்லை இந்த எதிர்ப்பின் பயன் அரசாங்க அதிபரின் அதிகாரம் கூடியதே! அவர் பதவியின் முற்பகுதியில் அரசாங்கத் தாபனங்களெல்லாம் சீர்கேடான நிலையில் இருந்தன. அரசாங்க அதிபரின் சர்வாதிகாரம் தலைதூக்கியது. அரசாங்க அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் அரசாங்க உத்தியோகத்திலிருக்கும் நாகலிங்கம் அவர்களின் உறவினர்கட்குப் பாதகமாக இருக்கும்.

நாகலிங்கம் அவர்கள் தனது சுயநலத்தையோ அல்லது உறவினரின் நலத்தையோ கருதினல் அரசாங்க அதிபரை எதிர்க்காமல் இருக்கவேண்டும். நாகலிங்கம் எதிர்க்காமல் அல்லது நொதுமல் ஆகயிருந்திருந்தால் அவருக்கும் அவருடைய உறவினருக்கும் பெரும் பதவிகள் கிடைத்திருக்கும். உண்மைத் தேசாபிமானியான நாகலிங்கம் இப்பதவிகள் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை. இதற்கு மாறுகத் தனக்குள்ள குடும்பச் செல்வாக்கு முழுவதையும் தேச நன்மைக்காகவே உபயோகித்தார். ஆகவே யாழ்ப்பாணத்தில் இவர் ''எதிர்க்கட்சித் தலைவர் ஆனர்'' இவர் 1884ம் ஆண்டு தொடக்கம் அரசாங்க அதிபருக்கு எதிராகப் பல கிளர்ச்சிகளை முன்னின்று நடத்தி அவற்றில் வெற்றிகண்டார்.

நாகலிங்கம் அவர்களின் ஆயுள் குறைவாக இருந்தபோதிலும் அதற்குள் தனது முக்கியமான இலட்சியங்களை நிறைவேற்றிவிட்டார். இதில் முக்கியமானது வடமாகாண நிர்வாகத்தில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் ஆகும்.

''கீழைத் தேசங்களிலுள்ள அரசியல்வாதிகள் பேருக்கும் புகழுக்குமாக அல்லது தம்மைச் சிறுமைப்படுத்தியவருக்கு எதிராகவே அரசியலிலும் பொது வாழ்விலும் ஈடுபடுவர்'' என்று மேல் நாட்டவர் கருதிவந்தனர். இக்குறைகள் ஒன்றும் நாகலிங்கம் அவர்களைப் பொறுத்தவரையிற் பொருந்தா. அவர் சேவைகள் எல்லாம் பொதுமக்களின் நன்மை கருதித் தூய்மையான முறையிற் செய்யப்பட்டவை ஆகும். அவர்செய்த சேவைகளெல்லாவற்றிலும் மேற் கூறப்பட்ட அம்சங்களைக் காணலாம்.

நாகலிங்கம் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாவற்றையும் இங்கு கூற இடந்தராது. அவர் செய்த முதல் சீர்திருத்தம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிபற்றியதாகும்.

இவருடைய முயற்சியினல் தகுதியான டாக்டர் ஒருவர் இந்த ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டார். இவர் இரு தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்கித் தேசாதிபதியிடஞ் சென்ருர். ஒன்று மாகாண நிர்வாகச் சீர்திருத்தம்பற்றியது. மற்றையது குமாரசுவாமியை இலங்கைத் தமிழர் பிரதிநிதியாகச் சட்ட நிருபண சபைக்கு நியமிப்பதுபற்றியது. குமாரசுவாமியை நியமிக்கவேணும் என்ற கோரிக்கை இவராற் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் வெற்றி கண்டார். நிர்வாகம்பற்றிய கோரிக்கை கவர்ணருக்கு மாத்திரம் அல்லாமல் லண்டனிலுள்ள குடியேற்ற நாடுகளுக்குப் பொறுப்பாயிருந்த காரியதரிசிக்கும் அனுப்பப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு அனுப்பிய பத்திரத்தில் சேர் உவில்லியம் துவைனத்தின் நிர்வாகச் சீர்கேடுகள் எடுத்துக்காட்டப்பட்டு அவரை ஒய்வபெறச் செய்யவேண்டும் என்று கேட்கப்பட்டது

[அடுத்த வாரம் முற்றும்]

# 2000 மீனவ குடும்பங்கள் உணவின்றி தவிப்பு!

## உயிர்களைக்காக்க உதவுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் கண்காணிப்பு வலயம், தடை செய்யப்பட்ட பிரதேசம் போன்ற அரசாங்கத்தின் தடைச் சட்டங்களினல் காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகளிலுள்ளசுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் ஒருவேளை உணவுகூடப் பெற முடியாத நிலைக்கு ஆளாகிச் சாவின் விளிம்பில் உள்ளார்கள்.

பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வளலாய், சேந்தாங்குளம் ஆகியவற்றின் கடற்பகுதிகள் இலங்கை இராணுவ, கடற்படை ஆகியவற்றின் தீவிர கண்காணிப்புப் பகுதிகளாக இருப்பதனல் மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதனல் வருமானம் எதுவுமில்லாதஇக்குடும்பங்களின் வளர்ந்தோரும், இளைஞர்களும், பச்சிளங் குழந்தைகளும் போதிய உணவின்றித் தவிக்கின்ருர்கள்.

இப்பகுதி மக்களுக்கு வழங்கப்படும் உத்தேச உணவு முத்திரை மிகக் குறைந்ததொரு நிவாரணமாக இருப்பதால் இப்பகுதி மக்களின் பரிதாப நிலையினை நீக்குமுகமாக இயன்றளவு நிதியுதவி, அத்தியாவசிய உணவு வகைகள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் ஆகியவற்றை வழங்கி உதவுமாறு மயிலிட்டி, பலாலி, ஊறணி பிரஜைகள் குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

உதவிகளைக் கோரியுள்ள அகதிகள் புனர்வாழ்வுநிலையம், மகளிர் முன்னணி மூலமாகவோ அல்லது நிவாரணவேலைகளில் ஈடுபட்டுவரும பிரஜைகள் குழுக்கள் மூலமாகவோ மயிலிட்டி, காங்கேசன்துறை பிரஜைகள் குழுப் பொருளாளரிடம் ஒப்படைக்கும றுமேற்படி பிரஜைகள குழு கேட்டுள்ளது (சூ)

அருட்திரு S V. மனுவேல்பிள்ளை
மேரி பஸ்ரியன் அடிகளாரின்
ஆத்ம சாந்தி பிரார்த்தனை
மலர்வு :11-12-1948 உதிர்வு: 06-01-1985
குருத்துவம்: 25-04-1975




மறைந்த எம் குருமகனின் அஞ்சலி திருப்பலி இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 06-02-1985 காலை 9 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

இத் திருப்பலியில் அனைவரும் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்ரேம்.

எமது துயரில் பங்கு கொண்டு உதவியஅனைவருக்கும் நெஞ்சுருக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ரேம்.

பிரிவால் துயருறும்
பெற்ருேர், சகோதரர்கள், மைத்துனன்,
''ஜெயவாசம்''. மைத்துனி, உறவினர்.
இளவாலை. 1657

# மறக்க முடியாத நெஞ்சம்



ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் பலன் பற்றி எண் சோதிட நிபுணர்கள் கூற்றுக்கள் உண்மையானவைதான் என்பதை அந்த இளைஞருடன் பழகிய அந்தக் கொஞ்சக் காலத்துக்குள் உறுதிப்படுத்தியிருக்கிறேன் அதிசயம்; பிறந்த ஐந்தாம் எண்ணிலேயே மறைந்தார்.

அமைதியும், அடக்கமும், கவர்ச்சியும், வசீகரமும், கம்பீரமும் அதிகம் அலட்டிக்கொள்ளாமல் செயல்படும் பாங்கும் இழுபத்தேழு வயதான அவ் இளம் ஆசிரியரிடம் நான் தரிசித்தவை

உள்ளூர் புதினம் முதல்உலக அரசியல் வரை மணித்தியாலக் கணக்கில் என்னுடன் அவர் அலசி ஆராய்ந்த நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்கா.

மேலதிக அரசாங்க அதிபராக நமக்குச் சேவையாற்றும் மானிப்பாய் சண்முகராசாவின் மூத்த புதல்வர் ராஜ்குமாரைத்தான் குறிப்பிடுகிறேன்.

மன்னர் மக்களுக்கு நடந்த கொடுமைகளின்போது, அவர் அங்குதான் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அந்த அழிவிலிருந்து தப்பினரென்ருலும், இடமாற்றம் பெற்று பளை மகாவித்தியாலயத்துக்கு வந்து சில வாரங்களுள் உயிர்துறந்துவிட்டார்.

எதிர்காலத்தில் அந்த இளைஞருக்கு இந்த மண்ணில் நடக்கப்போகும் அதிர்ச்சிகளை தாங்கும் சக்தி இருக்காது என்பதனலோ என்னவோ இறைவன் அவரைத் தன்னுடன் இரண்டறக்கலக்கச் செய்துவிட்டார்!

மானிப்பாய் இந்து, அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விபயின்று ஜி ஸி ஈ. உயர் வகுப்பில் சித்தி பெற்று ஆசிரியரானர் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் 'மற்ஸில்' ஆசிரியராக பயிற்சி பெற்று மானிப்பாய் மெம்மோறியல், மன்னர் சென் சேவியர், பளை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் படிப்பித்தார்.

ஆறுபேருக்கு மூத்தவராகப் பிறந்து எல்லாரையும் தன் பக்கம் இழுத்திடும் கவர்ச்சிமிக்க 'ராஜன்' என்ற ராஜகுமாருடன் பழகியவர்கள் அவரை மறப்பது கஷ்டம். நினைக்கும்போது எல்லாம் கண்களை நனைய வைக்கிருர்.

– ராஜகோபால்

# கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ். அரசாங்க வைத்தியசாலை பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி திரு. இ. பாலசுப்பிரமணியத்தின் இடமாற்றம் அடுத்த மாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இவர் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் இப்பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் திரு. தவராசாவின் இடமாற்றமும் 5-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இவர்கள் தங்கள் இடமாற்றத்தை ரத்துச்செய்து தருமாறு பொலிஸ் தலைமைப்பீடத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

# சான்றிதழ் வைபவம்

(புலோலி)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கத்தினல் நடாத்தப்பட்ட இலவச தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கும்வைபவமும் புதிய பயிற்சிகள் ஆரம்பவைபவமும் இம்மாதம் 3-ம் திகதி வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலயத்தில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெறவுள்ளது.

ரீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
மோகன், ராதிகா, நளினி நடிக்கும்
பாலாஜியின்
ஓசை

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே.ஆர்.விஜயா ரஜனி
ஜஸ்ரிஸ் கோபிநாத்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15.
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

UDUVIL GIRLS COLLEGE
FURTHER EDUCATION PROGRAMMING
புதிய வகுப்புக்கள்
G. C. E. (A/L) 85 & 86
ஆரம்பம்: 6-2-85 (புதன்)
வர்த்தகம் — திரு. ஜெயராம்
அளவையியல் — திரு. S. S. மனேகரன்
கணக்கியல் — திரு யோகன்
தமிழ் — திரு. பாலா
இந்துநாகரீகம் — பிரபல ஆசிரியர்
பொருளியல் — திரு. சின்னத்தம்பி
G. C. E. (O/L) டிச. 85
ஆங்கிலம் — திரு. வரதசுந்தரம்
கணிதம் — திரு யோகேஸ்வரன்
விஞ்ஞானம் — திரு. விக்கி
ஏனைய பாடங்களும் நடைபெறும்
★ G C. E. (A/L) விஞ்ஞான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படுகின்றது.
★ குறிப்பு: தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அனுமதிக்கப்படுவர்.
முழுநேர வகுப்புக்கள்
COMPUTER PROGRAMMING
DATA and PROCESSING
[BASIC / COBOL / FORTRAN]
5-வது Batch 15-2-85ல் ஆரம்பம்
நேரம்: 9-00AM TO 2-00PM (வார நாட்கள்)
I. D. P. M. Part I
மார்கழி Batch 15-2-85ல் ஆரம்பம்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
பரீட்சைமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
1663

## துப்பாகிச் சூட்டில் 6 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தடியில் மினிபஸ் வண்டி யொன்றில் ஆறு பயணிகள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துக் குள்ளானார்கள். நேற்று அதி காலை இது நடந்தது.

துப்பாக்கிப் பிரயோகத்தி னால் இதன் கண்ணுடிகள் சேத மடைந்தன. இனந்தெரியாத கூட்டமொன்றே இச் சம்ப வத்தில் ஈடுபட்டதாகக் கூறப் பட்டது. (கி)

## ''மாணவர்களின் கல்வியில் மண் போடாதீர்''

### யாழ். நகரில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

''மாணவர்களின் ஒரே சொத்து கல்வி. அதில் போடாதீர்கள் மண்ணை அள்ளி'' என்ற ஐக்கிய மாண வர் பேரவையின் சுவ ரொட்டிகள் யாழ்ப்பாணம்எங் கும் ஒட்டப்பட்டுள்ளன.

அச்சுவரொட்டியில், 'எங் கள் பிரச்னைகளை நாங்களே தீர்ப்போம்' என்றும், 'ஐக்கிய மாணவர் பேரவை அணித்து மாணவர் ஸ்தாபனம்' என்றும் கூறப்பட்டிருந்தது.

'இன்றைய மாணவர் நாளைய மக்களே' என்றும் 'அவர்கள் எதிர்காலத்தைப் பாபடிக்கா தீர்' என்றும் அச்சுவரொட்டி யில் கூறப்பட்டிருந்தது. (க)

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் இலகுப்பிள்ளை

ஓய்வுபெற்ற புகையிரத ஊழியர்

சங்கானை முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம்-இலகுப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், வள்ளியம்மா ஆசிரியை, நாகேஸ்வரியின் அன்புத் தந்தையும், கந்தசாமி கி. சே. இளவாலை, கமலநாதன் வர்த்தகர் கொக்குவில் அவர்களின் அன்பு மாமனுருமா வார். அன்னரது ஈமக் கிரியைகள் 3-2-85 ஞாயிற்றுக் கிழமை காலை 10-00 மணியளவில் சங்கானையில் நடை பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும் 1682

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் தீபரத்தினம்

ஒய்வுபெற்ற பிரதம லிகிதர் துவரம்பிட்டிய குருப் அவிசாவலை அன்னர் மயில்வாகனத்தின் அன்பு மனைவி ''சிவசக்தி'' ஆனைக்கோட்டை, சிவமணி, சிவபால ராஜா (ஆசிரியர் நைஜீரியா), சிவலங்கமியின் அரு மைத் தாயாரும், காலஞ்சென்ற புகையிரத அதிபா அரசரத்தினம், ஞானகிதேவி, பஞ்சேந்திரனின் அருமை மாமியாரும், சந்திரபாலன் (செமக்கோன்) Accountant, சிவாஜினி, சயந்தினி, வித்தியவாணி. நிமலினி, இந்திரஜித், ஜெயகரன், உமாகாந்தன், காண்டிபன், சிவாஸ்கர் ஆகியோரின் அன்புப் பேத்தியு மாவார். ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 9-00 மணிக்கு பிப்பிலியில் நடைபெறும். 1675

## மரண அறிவித்தல்

### சீமாம்பிள்ளை பீற்றர்

மாதகலைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். பீற்றர் ஜே பி. (பீற்றர் மாஸ்டர்) காலமானர். இவர் காலஞ்சென்ற எலிசபெத்தின் அருமைக் கணவ ரும், காலஞ்சென்ற அன்ரன் அல்பிறேட், ஆகியோர தும், Dr. ஜோ (வைத்திய அதிகாரி, அரசினர் வைத் தியசாலை, நாறம்பணுவ), செபஸ்ரியன் - கனடா ஜெபமணி ஞானி பிரான்ஸ் விமான சேவை [U.T.A] கொழும்பு, கோதை அதிபர் இந்து சிரேஷ்ட பாடசாலை கண்டி, காலஞ்சென்ற ஜெயமணியின் அருமைத் தந் தையும், எட்வேட் சனசூரியர் கிளிநெற், மக்ட லீன், சுகிர்தம், அக்னேஸ் ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னரின் பூத வுடல் ஞாயிற்றுக்கிழமை இன்று [3 2-85] காலை 8 30 மணிக்கு மாதகல் ''கிறீன் ஷேட்'' இல்லத் தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு குடும்ப மயானத் தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற் ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறறுக்கொள ளவும். 1681

## மரண அறிவித்தல்

### தி. கா. குழந்தைவேலு

முன்னைநாள் புங்குடுதீவு வாசியும், தற்போது 16/2 சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தில் வசிப்ப வரும் ஆகிய தி கா குழந்தைவேலு காலமாகிவிட் டார். இவர் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா, மதுரநாயகம், தங்கமுத்து, பொன்னம்மா ஆகியோரின் சகோதரும், சிவபாக்கியம், பரமேஸ்வரி, நாராயணசாமி (A. D. B. மணிலா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பித் துரை, சிவசாந்தி, காலஞ்சென்ற முத்தையா ஆகியோ ரின் மாமனுரும், கனகமணி, பத்மநாதன், ரஞ்சித மலர், பாமதி, லைமதி ஆகியோரின் பாட்டனுமாவார். இவரது ஈமக்கிரியை திங்கட்கிழமை 4-2-85 முற்பகல் 12 மணியளவில் அன்னரது இல்லத்திலிருந்து கோம்பை யன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற் றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

1683 — பிள்ளைகள்

## எளிமையான மாதா உற்சவம்

(சுண்டுக்குளி)

குருநகர் காணிக்கை மதா (புதுமை மாதா) தேவாலய வருடாந்த உற்சவம் நேற்று எளிமையுடன் நடந்து முடிந் தது கறுப்பு வெள்ளைக் கொடி களே ஆலயத்தில் காணப் பட்டன வழமையான சுற்றுப் பிரகாரமும் ஆயரின் திரு நாட் பூசையும் நடக்கவில்லை.

## குண்டுவைத்து தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் திருவடிநிலை என்ற இடத்தில் வாகை வைரவர் கோயிலுக்கருகிலுள்ள மடக் கட்டடம் இனந்தெரியாதவர் களால் குண்டுவைத்து தகர்க் கப்பட்டுள்ளது.

## 'எமக்குத் தொடர்பில்லை!'

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நாஸனல் வங்கிக் கொள்ளைச் சம்பவத்துக்கும், எமது இயக்கத்துக்கும் எது வித தொடர்புமில்லை என்று தம்பாபிள்ளை மகேஸ்வரன் (பனுகொடை) தலைமையிலான தமிழீழ இராணும்' இயக்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. (மா)

## நாளை தமிழகத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விசேட வானொன்றில் பறங்கி மலையிலுள்ள மொஹதீர் திட லில் விசேடமேடையொன்றில் அமர்ந்துகொண்டு தமிழ்நாட் டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்துவருகைதரும் மக்களின் வரவேற்பை ஏற்றுக்கொள் வார். அதன்பின் அவர் தமது 'இராம வரம்' இல்லத்துக்குச் செல்வார்.

முதலமைச்சரின் வருகையை யொட்டி அவருக்கு விசேட வரவேற்புக்கான ஏற்பாடுகளை ரும், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கை களையும் தமிழ்நாடு அரசு மேற் கொண்டு வருகிறது.

முதலமைச்சர் எம் ஜி.ராமச் சந்திரன் உடல் நிலை தற்போது மேலும் நல்ல முன்னேற்றகர மாக இருப்பதாகவும கூறப்படு கிறது.

## நேற்று ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு முன் ஞல் நேற்று ஒருவர் துப்பக் கிச் சூட்டுக்குப் பலியானர். இவரது சடலம் யாழ் ஆஸ் பத்திரியில் வைக்கப்பட்டுள் ளது.

## பெறுமதியான..

[1-ம்பக்க3-ம்கலத்தொடர்ச்சி)

யங்காடு சந்தியூடாக கொழும்புநோக்கிச் செல்லும் போது அவ்விடத்தில்வைத்து சாரதியையும், கிளீனரையும இறக்கிவிட்டு லொறி கடத் திச் செல்லப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

## வடக்கில் எரி..

(8ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க]

சில கார்களும், மோட்டார் சைக்கிள்களும் பெற்ரோல் இல் லாமல் இடைவழியில் நின்று விட்டன. [க]

# தியாகிகள் தினம்

இடர்பாடுகள் நிரம்பிவழியுங் காலத்தில் நாம் வாழ் கின்ருேம்.

இவற்றைக்கண்டு அஞ்சி, இவைக்காக வருந்துவோ மாஞல் இவற்றைக்கடக்கஉதவும் சாதனத்தை இழந்து விடுவோம்.

துனபப்படாமல் எந்தநாடும், எந்தமக்களும் உயர் வடைந்ததில்லை. இடிமுழக்கத்தில் பூக்கள் மலர்வதும், காற்றை எதிர்நோக்கிச் செல்லும் கப்பல் கரையேறு வதும் இயற்கை. பேச்சிலும் பார்க்க செயலே சிறந் தது. பேசிப்பேசிக் காலங்கழித்துவிட்டோமென்ற வடு நீங்கிவிட்டது.

இலட்சியத்தை அடைய உதவும் சமாதானப் பேச்சு வேறுபட்டது. அதனைக் குறிப்பது ஒலிவ் இலை. இங்கு ஒலிவ் இல்லை. கஷ்டப்படுவதன் மூலமே நாம் பூரண சுதந்திரத்தை அடையமுடியும்.

நாமென்பது இந்நாட்டு மக்களைக் குறிக்கிறது. சுதந்திரம் கால், அரை முக்கால் என்று பிரிக்கப்படும் பொருள் அல்ல.

பெப்ரவரி 4ம் தேதி (நாளை) நாட்டின் சுதந்திரதின மென்று யாரும் கொள்ளமுடியுமா? ஆளும் கட்சி அவ் வாறு கொண்டால் நாட்டின் இன்றைய நிலை அது தவறென்பதை நிரூபிக்கின்றது.

போரின்றிப்பெறும் சுதந்திரம் பேப்பர் சுதந்திரம்; பேப்பரில் நம்பிக்கைகொண்டு நாட்டின் ஆட்சியை நடத்துவது தோல்வியில் முடியும்.

இன்று நாட்டில் அமைதியின்மை எங்கும் காணப் படுகிறது. இதிலிருந்து எழுவது போர், போரில் மக் கள் சாவதும் சிறைப்படுவதும் நடைபெறுகின்றன.

இதனை நிறுத்தி நாட்டுக்கு விமோசனம் அளிக்க ஆண்டவன் கருணை வேண்டும்; தமிழ் மக்களின் சுதந் திரம் நாட்டுக்கு இன்னும் கிட்டாத பூரண சுதந்திர மென அறிக.

இதற்கு தம் உயிரையும் உடைமையையும் தியாகம் செய்யும் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் நாளே பெப்ரவரி 4ம் தேதி ஆகிய நாளைய தினம்.

அடுத்த நாளாகிய பூரணை பூரண சுதந்திரத்தின் சின்னமென்று உறுதி கொள்க.

## தமிழர் மீதான...

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

செய்யப்பட்டுள்ளனர். தொடர்ந்து கொலைசெய்யப் பட்டுவருகின்றனர் அவர்களது வீடுகள் கொள்ளையடிக்கப்படு கின்றன. தீக்கிரையாக்கப்படு கின்றன. அவர்களது உடமை கள் நாசமாக்கப்படுகின்றன. அங்கு வாழும் பலருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அங்குள்ள மக்கள் நிச்சய மற்ற நிலையில் பயத்துடன் வாழ்க்கையை ஓட்டுகிறுர்கள். இ. தொ காங்கிரஸுக்கு நிவா ரணம் கோரி கடிதங்கள் வந்து குவிகின்றன. சர்வகட்சி மகா நாட்டால் பலன் இல்லை. தமிழ் மக்கள்பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதில்லை என்று அரசு அறிவித்திருக்கிறது

''இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை அரசு விரும்பவில்லை ராணுவ நடவடிக்கையையே விரும்புகிறது'' என்ற அச் சத்தை மக்களுக்கு அரசு ஏற் படுத்திவிட்டது.

வடக்கில் பயிற்றப்பட்ட மக்களை குடியேற்றுவது என்ற அரசின் யோசனை ராணுவ நட வடிக்கை நிலையைத் தெளி வாக்குகிறது.

அரசின் பொறுப்பற்ற இந் தப் போக்குகள் இனங்களுக் கிடையில் நீண்ட காலமாக இருந்துவரும் பரிந்துணர்வுக்கு முரணுகவுள்ளது.

மலையகத்து மக்கள் சந்தே கத்துக்கு இடமானவர்களாக கைது செய்யப்பட்டு இம்சைக் குள்ளாக்கப்படுகிறுர்கள்

இவ்விதமான துன்பகர, கொடூர நிகழ்வுகளை நிறுத்த அரசும், அரசியற்கட்சித் தலை வர்களும் முன்வர வேண்டும்

இவ்வாறு நேற்றைய கூட் டத்தில் தீர்மானம இயற்றப் பட்டது. மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டு இந்தியாவின் உதவியு டன் இனப்பிரச்னையைத் தீர்க் கப்படவேண்டும் என்ற தனது நிலையையும் வற்புறுத்தியுள் ளது.

வடக்கு கிழக்கிலுள்ள கட் டுப்பாடுகள் நீக்கப்பட்டு மீண் டும் சிவில் நிர்வாகம் ஏற்பட வேண்டும் என்றும் வற்புறுத் தப்பட்டது.

## அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் புனித அன்னம் மாள் ஆலயத்தில் நாளை திங் கட் கிழமை காலை வண மேரி பஸ்ரியன் அடிகளாரின் 31வது நினைவு தினத்தை யொட்டி ஆன்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது

## தென்கிழக்காசிய. ..

(8-ம் பக்கம் 5-ம் கலம்பார்க்க]

தென்கிழக்காசிய நாடு களின் அரசாங்கங்களும் மக்க ளும் உதவவேண்டும் என்று 'தமிழீழ விடுதலை முன்னணி' யின் செயலாளர் திரு. ஈழ வேந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் நாக்பூரி பேசுகையில் இவ் வாறு தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்னை அரசியல் ரீதியால்தான் தீர் க்க முடியும் என்றும் அவர் கூறினுர்

## குடியேறுவோரு...

(1-ம்பக்க 2மகலத்தொடர்ச்சி)

கப்படவுள்ளது.

இதேவேளை அண்மையில் நடைபெற்ற களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் கூட் டத்தில் பேசிய அதன் தலை வர் திரு இந்திரதாச ஹெட்டி ஆராச்சி, இந்த குடியேற்றத் திட்ட விவகாரத்தில் ஒவ் வொரு எம். பி. களும் கவ னம் செலுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.